பக்கங்கள்:10 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 25 புதன்கிழமை 09.03.2022 கதிர் 124

### இது ரகசியம் அல்ல!

"சிங்கத்தின் கால்கள் பழுது பட்டாலும் சீற்றம் குறைவதுண்டோ?" – இது 'பாகப்பிரிவினை' படத்தில் கவிஞர் கண்ணதாசன் எழுதிய பாடலின் இடையில் வரும் ஒரு வரி.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ☞2

## மாணவி கோடரியால் தாக்கிப் படுகொலை!

### பதுளையில் கொடூரம்

பதுளை, ஹாலி எல, உடுவரை தோட்டத்தைச் சேர்ந்த உயர்தர மாணவி ஒருவர் நேற்றுப் பிற்பகல் கோடரியால் தாக்கிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

ஹாலிஎல நகர பிரபல தமிழ்ப் பாடசாலையில் கற்கும் 18 வயதுடைய குறித்த மாணவி, பாடசாலைக்குச் சென்று வீடு ☞9

## அமைச்சுப் பதவியைத் துறந்து அதிரடி காட்டிய ஜயந்த சமரவீர

தேசிய சுதந்திர முன்னணியின் தேசிய அமைப்பாளரும் இராஜாங்க அமைச்சருமான ஜயந்த சமரவீர, தான் வகித்த அமைச்சுப் பதவியை இராஜிநாமா செய்துள்ளார்.

இது தொடர்பான பதவி துறப்புக் கடிதத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நேற்று அவர் அனுப்பியுள்ளார்.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான ☞9



# சம்பந்தனுடன் அமெ. தூதுவர் தீர்வு குறித்து நேற்றுப் பேச்சு!

### தொடர்ந்து கலந்துரையாடத் தீர்மானம்



கொழும்பு, மார்ச் 09

அரசியல் தீர்வின் அவசியம், பொறுப்புக் கூறல், இலங்கையர் எல்லோருக்கும் நீதி கிட்டுதல் ஆகியவை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுடன் தாம் பேச்சு நடத்தினார் என்று கொழும்புக்கான புதிய அமெரிக்கத் தூதுவர் ஜூலி ஜே.சுங் அம்மையார் தெரிவித்துள்ளார். ☞9

## முல்லைத்தீவில் உறவுகள் நீதி வேண்டி ஆர்ப்பாட்டம்!

### கறுப்புக்கொடியை ஏந்தியவாறு கோஷம்

முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரது உறவினர்களின் தொடர் போராட்டம் ஐந்து வருடங்கள் நிறைவடைந்துள்ள நிலையில், மகளிர் தினத்தைத் துக்கநாளாகக் கடைப்பிடித்து நேற்று முல்லைத்தீவு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரது உறவினர்கள் மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

முல்லைத்தீவு – புனித இராஜப்பர் ஆலய ☞9



## கோட்டா தலைமையில் பொருளாதாரப் பேரவை

### நியமிக்க அமைச்சரவை அனுமதி

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் 11 உறுப்பினர்கள் அடங்கிய பொருளாதாரப் பேரவையை நியமிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அத்துடன், குறித்த பொருளாதாரப் பேரவையை ☞9



## காணாமல்போனோர் தொடர்பில் விசாரணை செய்ய 25 குழுக்கள்

### அமைச்சரவை அனுமதி என்கிறார் டலஸ்

இலங்கையில் காணாமல் போனோர் தொடர்பில் 14 ஆயிரத்து 988 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்றும், இவை தொடர்பில் துரித விசாரணை செய்யும் நோக்கில் 25 விசாரணைக் குழுக்களை அமைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது என்றும் அமைச்சரவைப் ☞9



## யாழில் மின்சாரம் தாக்கி இளைஞர் பரிதாபச் சாவு!

(ந.லோகதயாளன்)

யாழ்., கொழும்புத்துறையில் நேற்று மின்சாரம் தாக்கியதில் இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

சுதேஸ்வரன் சுதர்சன் என்ற 29 வயது நபரே இவ்வாறு உயிரிழந்தார்.

கொன்கிறீட் கல் அரியும் இயந்திரத்தில் ☞9

## பயணத்தின்போது கழன்று ஓடிய பஸ்ஸின் சில்லு



(எஸ்.நிதர்ஷன்)

இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான ☞9

## மக்கள் குடியிருப்புக்குள் புகுந்தன இரு யானைகள்

### கௌதாரிமுனையில் பரபரப்பு

(ந.லோகதயாளன்)

பூநகரி, கௌதாரிமுனைப் பகுதியிலுள்ள மக்கள் குடியிருப்புக்குள் நேற்று இரு காட்டு யானைகள் உட்புகுந்தமையால் பெரும்பரபரப்பு நிலவியது.

முட்கொம்பன் காட்டுப்பகுதியில் நடமாடிய யானைகள் உணவுக்காக இவ்வாறு பாதை மாறி வந்திருக்கக்கூடும் என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

விபரம் தெரிந்த ☞2



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இரா.சம்பந்தன் ஐயா. முதிர்ந்து, வயது போன தள்ளாமை நிலையில் இருக்கின்றார். ஆனாலும் தமிழர் தேசியப் பிரச்சினை பற்றிய விடயத்தில் அவரின் சீற்றம் குறையவில்லைத்தான்.

நேற்று அவரை, அவரது இல்லத்தில் முதல் தடவையாகச் சந்தித்த கொழும்புக்கான அமெரிக்காவின் புதிய தூதுவர் ஜூலி ஜே.சுங் இதனை உணர்ந்திருப்பார் என்று நினைக்கிறேன்.

வயது முதிர்ந்து, சொற்கள் தளதளத்தாலும் கூட, உறுதி குறையாமல் – குலையாமல் – ஒரு விடயத்தை புதிய அமெரிக்கத் தூதருக்கு நேரடியாக எடுத்துரைத்திருக்கின்றார் சம்பந்தன்.

"நியாயமான கௌரவத் தீர்வு ஒன்றுக்கான தமிழர்களின் தேடல் – அபிலாஷை நீதியானது என்று அமெரிக்கா கருதுகின்றது. அதனால் அதற்கு ஆதரவாக எப்போதும் அமெரிக்கா நிற்கும்" – என்று உறுதியளித்தார் புதிய அமெரிக்கத் தூதுவர்.

"ஆதரவாக நிற்பது மட்டுமல்ல, அப்படி ஒரு தீர்வைத் தமிழர்களுக்குப் பெற்றுக் கொடுப்பது உங்களினதும் (அமெரிக்காவினதும்) இந்தியாவினதும் கடப்பாடு. உதறித் தள்ள முடியாத பொறுப்பு. தமிழர்களின் பேரம் பேசும் வலிமையாக இருந்த விடுதலைப் புலிகளை அமெரிக்காவினதும், இந்தியாவினதும் நேரடிப் பங்களிப்பு, ஈடுபாடு இல்லாமல் இலங்கையினால் ஒரு போதும் தோற்கடித்திருக்க முடியாது. நான் விவாதத்துக்குள் இறங்க முற்படவில்லை. ஆகவே இப்போது நியாயமான தீர்வைப் பெற்றுத் தரும் பொறுப்பு உங்களைச் சார்ந்திருக்கின்றது. புலிகளை அழிப்பதற்கு உங்களினதும் இந்தியாவினதும் உதவிகளைப் பெறுவதற்கு உங்கள் இரண்டு தரப்புகளுக்கும் கொழும்பு சில, பல உறுதிமொழிகளை வழங்கியிருந்தது. அவற்றை நடைமுறைப்படுத்தச் செய்வதுதான் உங்களின் இப்போதைய பிரதான பொறுப்பாகின்றது. யுத்தம் முடிந்து 13ஆண்டுகளின் பின்னரும் கூட அதைச் செயற்படுத்தச் செய்ய முடியாத தரப்புகளாக அமெரிக்காவும், இந்தியாவும் இருப்பதுதான் தமிழர்களின் துரதிஷ்டம்." – என்ற சாரப்பட, மெல்லிய, தளர்வான குரலில் – ஆனால் ஆணி அடிப்பது போன்ற உறுதியுடன் – எடுத்துரைத்திருக்கின்றார் சம்பந்தன்.

கொழும்பில் தமது புதிய பொறுப்பின் நீள, ஆழ, அகலங்களை – பரிமாணங்களை – சம்பந்தனுடனான இந்தச் சந்திப்புடன் அமெரிக்கத் தூதுவர் ஜூலி ஜே.சுங் அம்மையார் ஓரளவு உணர்ந்திருப்பார் என்று நம்பலாம்.

இதேசமயம், இலங்கை தொடர்பில் அமெரிக்க நிலைப்பாடு சம்பந்தமான இன்னொரு விடயமும் இப்போது சத்தம் சந்தடியின்றி கட்டவிழத் தொடங்கியிருக்கின்றது. அதுவும் கவனிக்கத்தக்கது.

2011 இறுதியில் இரா.சம்பந்தன், மாவை சேனாதிராசா, சுமந்திரன், சுரேஷ் பிறேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரைக் கொண்ட கூட்டமைப்பின் உயர் மட்டக் குழு ஒன்று வொஷிங்டனுக்குச் சென்றிருந்தது.

அதன் பின்னர், இரண்டு, மூன்று மாதங்கள் கழித்து 2012 பெப்ரவரி – மார்ச்சில் இலங்கை விவகாரம் தொடர்பில் தனது புதிய அரசியல் நிலைப்பாட்டை அமெரிக்கா கோடி காட்டியது. இலங்கையின் யுத்த காலத்தில் இடம்பெற்ற விடயங்களுக்குப் பொறுப்புகூறலை நிலைநாட்டச் செய்யும் விடயத்தைத் தனது கைகளில் அமெரிக்கா எடுத்தது அப்போதுதான். ஜனாதிபதி ட்ரம்பின் நிர்வாகம் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இருந்து அமெரிக்கத் தரப்பை விலக்கும் வரை ஜெனிவாவில் இவ்விடயத்தில் முழு ஈடுபாட்டுடன் நேரடியாகப் பங்களித்தது அமெரிக்கா. ஜோ பைடன் ஜனாதிபதியானதும் திரும்பவும் கவுன்ஸிலுக்குள் வந்து விட்ட அமெரிக்கா, அந்த விவகாரத்தை – பொறுப்புக் கூறலை – வற்புறுத்துவதில் மீண்டும் முனைப்பாக ஈடுபடத் தொடங்கியுள்ளது.

2011 இறுதியில் உயர்மட்ட கூட்டமைப்புக் குழு ஒன்று வொஷிங்டன் சென்ற மாதிரி, 2021 இறுதியிலும் தமது உயர் மட்டக் குழு ஒன்றை கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தன் வொஷிங்டன் அனுப்பியிருந்தார். ஜனாதிபதி சட்டத்தரணிகள் எம்.ஏ.சுமந்திரன், கனகேஸ்வரன் மற்றும் நிர்மலா சந்திரகாசன் ஆகியோர் அடங்கிய சட்ட விற்பன்னர் குழுவே இம்முறை அமெரிக்கா சென்றிருந்தது.

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பான சட்ட ஆலோசனைகளை வழங்கவே இந்தக் குழுவை சம்பந்தன் அமெரிக்கா அனுப்புகின்றார் எனவும், இந்த ஆலோசனையின் பின்னர் இலங்கை தொடர்பான அமெரிக்காவின் புதிதாக வகுக்கப்பட்ட கொள்கை நிலைப்பாடு 2012 முற்பகுதி போல இம்முறை 2022 முற்பகுதியில் (மார்ச் – ஏப்ரலில்) வெளியாகும் எனவும் எதிர்வு கூறப்பட்டது. அந்த எதிர்வு கூறல் ஓரளவு சரி என்பதற்கான சமிக்ஞைகளே இப்போது வெளியாகியுள்ளன.

இதுவரை காலமும் இலங்கையில் யுத்த காலத்தில் இடம்பெற்றவை தொடர்பில் உண்மைகளைக் கண்டறிதல், நீதியை நிலை நாட்டுதல், பொறுப்புக் கூறலை நடைமுறைப்படுத்தல், மீள நிகழாமையை உறுதிப்படுத்தல், இழப்பீடுகளை வழங்குதல் போன்றவை குறித்து பிரஸ்தாபித்துக் கொண்டிருந்த அமெரிக்கா, இம்முறை முதல் தடவையாக நின்று, நிலைத்து, நீடிக்கக் கூடிய தீர்வு குறித்து ஜெனிவாவில் பிரஸ்தாபிக்கத் தொடங்கியிருக்கின்றது.

"நீடித்திருக்கக் கூடிய நியாயமான தீர்வு ஒன்றைக் காண்பதற்காக தமிழ், முஸ்லிம் கட்சிகள், சமூக சேவை அமைப்புகள் உட்பட சகல தரப்பினரையும் உள்ளடக்கிய கலந்துரையாடலை ஆரம்பிக்கும் படி கொழும்பு அரசைக் கேட்டுக் கொள்கின்றோம்." – என்ற சாரப்பட நேற்று முன்தினம், இலங்கை விவகாரத்தை ஒட்டி அமெரிக்க பிரதிநிதி ஜெனிவாவில் ஆற்றிய உரை அமெரிக்காவின் புதிய கொள்கை நிலைப்பாட்டின் பிரதிபலிப்புத்தான்.

இலங்கையில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான விடயத்திலும் நேரடியாக சம்பந்தப்படுவது என்ற சாரப்பட்ட கொள்கை நிலைப்பாட்டை அமெரிக்கா எடுத்திருப்பதன் ஆரம்பப் பிரதிபலிப்பாக இந்த உரையை மதிப்பாய்வு செய்ய முடியும்.

அந்தப் பின்புலத்தின்தான் இலங்கைத் தமிழர் விடயத்தில் அமெரிக்காவின் தார்மீகப் பொறுப்பை இடித்துரைத்திருக்கின்றார் கிழட்டு அரசியல் புலி சம்பந்தன்.

புதிய அமெரிக்கத் தூதுவரும் தாம் அரசியல் தீர்வின் அவசியம் குறித்து சம்பந்தனுடன் நேற்று விரிவாகக் கலந்துரையாடினார் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயத்தில் அமெரிக்காவின் தொடர் பிரதிபலிப்புகளைத் தொடர்ந்து நாம் பார்க்கலாம் என்று நம்புகிறேன்.

– மின்னல் –




## மக்கள் குடியிருப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காலத்தில் இதுவரை கௌதாரிமுனைக்கு யானைகளே வந்தது கிடையாது எனவும் அவர்கள் கூறினர்.

இது தொடர்பில் மாவட்ட வன ஜீவராசிகள் திணைக்களத்துக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து திணைக்கள அதிகாரிகள் அப்பகுதிக்குச் சென்று நிலைமையை அவதானித்து யானையை வனப்பகுதிக்கு விரட்ட நடவடிக்கை எடுத்தனர்.

**திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**
**வியாபார முகாமைத்துவமாணி பட்டப்படிப்பு 2020/2021**
Bachelor of Business Management Degree Programme – 2020/2021
**புதிய அனுமதி - 2022**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தினால் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினூடாக நடாத்தப்படும் தமிழ் மொழி மூலமான மூன்று வருட கால வியாபார முகாமைத்துவமாணிக் கற்கை நெறிக்கு புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அனுமதிக்கான தகைமைகள்:-**

★ க.பொ.த. (உ/த) பரீட்சை – 2019 அல்லது அதற்கு முன்னர் எப்பாடப் பிரிவில் இருந்தாயினும் சித்தியடைந்திருப்பதுடன் பொது அறிவுப் பரீட்சையில் ஆகக் குறைந்தது 30% ஆன புள்ளிகளைப் பெற்று பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதியானவர்கள்

**அல்லது**

★ ஏதாவது ஒரு பிரிவில் NVQ மட்டம் 4 அல்லது அதற்கு மேல் பூர்த்தி செய்தவர்கள் (சித்தியடைந்த வருடம் 2019 அல்லது அதற்கு முன்)

**அல்லது**

★ பல்கலைக்கழக மூதவையினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு சமமான வேறு தகைமையைக் கொண்டவர்கள்.

**வியாபார முகாமைத்துவமாணி முதலாம் வருட தேர்வில் இருந்து விலக்களிப்பு கோருதல்:**

★ பல்கலைக்கழக மூதவையினால் அங்கீகரிக்கப்பட்ட, 1ஆம் வருடத் தேர்வில் இருந்து விலக்களிப்பு கோருவதற்கான தகைமைகளைக் கொண்டிருப்பவர்கள், வியாபார முகாமைத்துவமாணி இரண்டாம் வருட கற்கைநெறிக்கு, உரிய தகைமைகளைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்க முடியும்.

மேலதிக விபரங்களுக்கு : http://www.codl.jfn.ac.lk/wp-content/uploads/2022/02/Exemption.png

**முக்கிய குறிப்பு:** இலங்கைப் பல்கலைக்கழகமொன்றில் உள்வாரியாக பட்டப்படிப்பொன்றுக்காக பதிவுசெய்தவர்கள் விண்ணப்பிக்கலாகாது.

**மாணவர் தெரிவு :**

விண்ணப்பதாரிகள் பொது உளச்சார்புப் பரீட்சை அல்லது நேர்முகப் பரீட்சை அல்லது இரண்டின் மூலமும் தெரிவு செய்யப்படுவர். பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

**விண்ணப்பப்படிவங்களைப் பெறுதல்:**

யாழ்.பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் விண்ணப்பப்படிவத்தினை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். (காலை 08.30 மணி தொடக்கம் மாலை 04.15 மணி வரை)

**அல்லது**

www.codl.jfn.ac.lk எனும் இணைய முகவரியில் விண்ணப்பப்படிவத்தினை பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

★ விண்ணப்ப மற்றும் பரீட்சைக் கட்டணமாக ரூபா 1000.00 இனை 050122150001411 என்ற மக்கள் வங்கிக் கணக்கிலக்கத்தில் செலுத்தி, பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

**விண்ணப்பப்படிவங்கள் சமர்ப்பித்தல்:**

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பபடிவங்கள் நேரடியாக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் சமர்ப்பிக்கலாம்.

**அல்லது**

பிரதிப் பதிவாளர், திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்க முடியும். தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் **"வியாபார முகாமைத்துவமாணி பட்டப்படிப்பு - 2020/2021"** என தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி: 08.04.2022 (வெள்ளிக்கிழமை) (விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)**

மேலதிக விபரங்களுக்கு : 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

**பதிவாளர்**
08.03.2022

# சபரிமலை

# ஸ்ரீ ஐயப்பன் ரேடர்ஸ்

## Sabarimalai Sri Iyappan Traders

இல.315, கண்டிறோட், கிளிநொச்சி.

No. 315, Kandy Road, Kilinochchi.

**Tel:- 021 228 3701,076 307 8091**




விசேட நிகழ்வுகளுக்கும், வியாபார நிலையங்களுக்கும் இலவச Delivery - அனைத்துத் தேவைகளுக்கும்

**077 986 2476 - 077 983 8091** எனும் இலக்கங்களுக்கு வரும் ஓடர்களுக்கு சலுகை வழங்கப்படும்.

**076 307 8091, 021 228 3701, 077 986 2470**

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## அழிவுக்குத் துணை போகாதீர்!

**நாட்டின் நிலைமை மிகவும் மோசமான கட்டத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது.**

**அன்றாடம் காய்ச்சிக் குடும்பங்கள் மட்டுமல்ல, விளிம்பு நிலை குடும்பங்கள் கூட அரைப்பட்டினி நிலைமை என்றாகி விட்டது.**

**இந்தக் கேடு கெட்ட நிலைமையில், இன்னும் ஓரிரு வாரங்களோ, மாதங்களோ கூடத் தாக்குப் பிடிக்க முடியாது என்ற நிலைமைக்குப் பல்லாயிரம் குடும்பங்கள் வந்து விட்டன.**

**கோட்டாய ராஜபக்ஷவை ஆரவாரமாக வரவேற்ற குடும்பங்கள் பலவும் அவரைத் திட்டித் தீர்க்கின்றன. கரித்துக் கொட்டுகின்றன. ஆட்சியாளர்களுக்கு எதிரான வசவு வார்த்தைகளை – கோபாவேஷ அர்ச்சனைகளை – திரும்பிய பக்கம் எல்லாம் கேட்க முடிகின்றது.**

**எல்லாவற்றுக்கும் வரிசையில் நிற்கும் இழவு காலம் நாட்டுக்கு வந்திருப்பது மிகப்பெரும் துரதிர்ஷ்டம்.**

**எரிபொருளுக்கு இலங்கை முழுவதும் நீண்ட கியூ. எரிவாயு சிலிண்டர்களுக்கு கியூ. பாணுக்கும் பேக்கரி உற்பத்திப் பொருள்களும் அந்த நிலைமை எந்நேரமும் வரும்.**

**போதாக் குறைக்கு நீண்ட நேர மின்வெட்டால் மக்களின் வாழ்வியலின் ஒவ்வொரு விடயத்திலும் நெருக்கடி.**

**இவற்றுக்குத் தீர்வோ, திட்டவட்டான பதிலோ தராமல் விட்டேத்தியாக நடந்து கொள்கின்றது ஆட்சிப்பீடம்.**

**இந்தப் பின்னடைவு நிலை நாள்கள் செல்லச் செல்ல மோசமடைந்து செல்கின்றதே தவிர, சற்றேனும் மேம்படுவதாகத் தெரியவில்லை. மேம்படும் என்ற நம்பிக்கையும் இல்லை. அதற்கான அறிகுறியோ, குறிப்போ கிஞ்சித்தும் கிடையாது.**

**அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் இரண்டரை வருடங்களாவது காத்திருக்க வேண்டும். நாடாளுமன்றத் தேர்தலுக்கும் அப்படித்தான்.**

**இந்த ஜனாதிபதியையும், இந்த ஆட்சிப் பீடத்தையும் பதவிக்குக் கொண்டு வந்தமைக்காக இப்போதைய கெடு காலத்தை இன்னும் இரண்டரை ஆண்டுகாலம் சகித்து மாளுவதைத் தவிர மக்களுக்கு வேறு வழியில்லை என்ற சட்டக் கட்டாயம்.**

**இந்தக் கெடுகால ஆட்சியின் கீழ் அடுத்த இரண்டரை வருடங்களுக்குத் தாக்குப் பிடிப்பது என்பது மக்களுக்கு நினைத்துப் பார்க்க முடியாத சிக்கல்.**

**நாளாந்தம் மோசமடைந்து வரும் பொருளாதாரத்துடன் இதே கேடு கெட்ட நிலை அடுத்த இரண்டரை வருடங்களுக்கும் நீடிக்கும் என்றால், உயிர்மூச்சு விடவே குடும்ப வாழ்வு இங்கு மிஞ்சாது.**

**அரசில் – ஆட்சித் தரப்பில் – அங்கம் வகிக்கும் தரப்புகளுக்கு எல்லாம் இந்த மோச நிலைமை குறித்து நன்கு தெரியும். ஒருபுறம் ஆட்சித் தலைமையை நல்வழிப்படுத்தும் துணிவும், திராணியும் வலிமையும் அவற்றுக் கிடையா. மறுபுறம் பதவி சுகம், பவிசு ஆகியவற்றுக்காக ஆட்சித் தலைமையைப் பகைத்துக் கொள்ளவும் அவை விரும்பவில்லை.**

**ஆனாலும் அத்தரப்புகள் ஒரு விடயத்தை மறந்து விடக் கூடாது. நிலைமை இதே போன்று மோசமாகத் தொடர்ந்தால், பதவியில் அத்தரப்புகள் நீடிக்கலாமோ, என்னவோ, இந்த ஆட்சியின் முடிவில் புதிய தேர்தல்களுக்காக தமது மக்களைத் தாங்கள் சந்திக்க முடியாத – முகம் கொடுக்க இயலாத – கட்டம்தான் எஞ்சும்.**

**தத்தமது பிரதேசத்தில் வழமையாகத் தமக்கென நின்று பிடிக்கும் சொந்த வாக்குகளே தம்முடன் இருக்காத நிலைமை ஏற்படும் என்பதை இப்போதைய ஆட்சித் தரப்புக்கு சாமரம் வீசி, ஆலவட்டம் பிடிக்கும் அரசியல்வாதிகள் சிந்திக்க வேண்டும்.**

**ஆகவே, இந்த மக்கள் விரோத ஆட்சிக்குத் துணை போகும் அரசியல் தரப்புகள் அது குறித்து ஒன்றுக்கு இரண்டு தடவைகள் மீள்பரிசீலனை செய்து பார்ப்பது நல்லது.**

# ஐ.நா. சபையில் 31 நாடுகள் இலங்கைக்குப் பேராதரவு!

### வெளிவிவகார அமைச்சர் நம்பிக்கை



நல்லிணக்கத்துக்கான அரசாங்கத்தின் கணிசமான முயற்சிகளுக்கு உலகில் பல இலங்கைக்கு ஆதரவை வெளிப்படுத்தின என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

இலங்கை தொடர்பான மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை தொடர்பாக உரையாற்றிய 45 நாடுகளில் 31 நாடுகள் இலங்கைக்கு ஆதரவாகப் பேசியுள்ளன எனத் தெரிவித்தார்.

தெற்கு, தென்கிழக்கு மற்றும் மத்திய ஆசியா மற்றும் ஆபிரிக்க நாடுகள் பல இலங்கைக்கு ஆதரவு வழங்கியுள்ளன என ஜி.எல்.பீரிஸ் குறிப்பிட்டார்.

கொரோனா தொற்றுக்கு மத்தியில் நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவதில் இலங்கையின் அர்ப்பணிப்பு தொடர்பாக அவர்கள் பாராட்டினர் எனத் தெரிவித்தார். ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளரால் முன்வைக்கப்பட்ட அறிக்கை கடுமையான முரண்பாடுகள் மற்றும் பலவீனங்களைக் காட்டுவதாக ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

# அரசியல் இருப்பைத் தக்கவைக்கும் வகையிலே தமிழ் தேசிய கூட்டமைப்பினர் செயற்படுகின்றனர்

### முன்னணி குற்றச்சாட்டு

அரசியல் இருப்பைத் தக்கவைத்துக் கொள்ளும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் செயற்படுகின்றனர் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி குற்றம் சாட்டியுள்ளது. அதற்காகவே பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராக செயற்பட்டு வருகின்றார்கள் என அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் சுரேஷ் குற்றம்சாட்டியுள்ளார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற மாமனிதர் சிவநேசன் கிட்டிணன் 14 ஆவது ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்குக்கருத்துதெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

# மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற சர்வதேச மகளிர் தினம்!



''நாளைய நிலை பேறுக்கான இன்றைய பால்நிலை சமத்துவம்' எனும் கருப்பொருளில் சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் நேற்று (செவ் வாய்க் கிழமை ) காலை 9.30 மணியளவில் மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.



மகளிர் சிறுவர் அபிவிருத்தி முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு, மன்னார் மாவட்ட செயலகம்,மன்னார் மாவட்ட உள்ளூராட்சி மன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியம், மன்னார் மாவட்ட குடி சார் அமைப்புகளின் சம்மேளனம் ஆகியவை ஒன்றிணைந்து சர்வதேச மகளிர் தின நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக மேலதிக அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன் போது நிகழ்வுகள் இடம்பெற்றதோடு மாவட்டத்தின் மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு மற்றும் மடு ஆகிய 5 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் தெரிவு செய்யப்பட்ட பெண் தொழில் முயற்சியாளர்கள் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். இதன் போது பெண்கள் அமைப்பின் பிரதி நிதிகள், மாதர், கிராம அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள்!

சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை இடம்பெற்றது.

இதன்போது யாழ்ப்பாண மாவட்ட செயலக வளாகத்தில் மாவட்ட செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் ஏற்பாட்டில்சிறுதொழில்முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருளகளுக்கான விற்பனைக் கண்காட்சியும் இடம்பெற்றது.

அத்தோடு இன்றைய மகளிர் தின நிகழ்வில் பிரதேச செயலக ரீதியாக தெரிவு செய்யப்பட்ட சில சிறுதொழில் முயற்சியாளர்களுக்கான கௌரவமும் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



**டெனிஸ்ற்ரா அருமைலிங்கம்**
**உரிமையாளர்**
**Adhisayaa Bridal Studio**
**அழுகுக்கலை நிறுவனம்**

# “ஏற்ற தாழ்வுகள் வந்து போனாலுமே என் தொழிலை தொடர்ந்தும் வெற்றிகரமாக நடாத்தி வருகின்றேன்”

**Adhisayaa Bridal Studio அழுகுக்கலை நிறுவனத்தின் உரிமையாளர் டெனிஸ்ற்ரா அருமைலிங்கம் உடனான நேர்காணலிது.**

### உங்களைப் பற்றிய அறிமுகம்

நான் டெனிஸ்ற்ரா அருமைலிங்கம். Adhisayaa Bridal Studio அழுகுக்கலை நிலையத்தை நடாத்தி வருகின்றேன். யாழ்ப்பாணத்தில் பிறந்து தற்போது திருகோணமலையில் வசித்து வருகின்றேன். 2006 ஆம் ஆண்டு அழுகுக்கலைத்துறையை ஒரு தொழிலாக முன்னெடுத்து செய்தேன். 16 வருடங்களைக் கடந்து தற்போது 17 வது வருடத்தில் அடியெடுத்து வைக்கின்றேன். என்னுடைய அழுகுக்கலை நிலையத்தில் மிகமுக்கியமாக செய்யப்படுவது மணப்பெண் அலங்கார ஒப்பனைகள். ஏனைய அழுகுக்கலைகளை மேற்கொண்டாலும் மணப்பெண் அலங்கார ஒப்பனைகளையே நான் முதன்மையாக முன்னெடுத்து செய்கின்றேன்.

### அழுகுக்கலைத் துறையில் எப்படி ஆர்வம் வந்தது?

பாடசாலையில் கல்வி கற்கும் காலத்தில் நடனத்தை ஒரு பாடமாக தெரிவு செய்து கற்றுவந்தேன். நடனகலைஞர்கள் நடனமாடுவதற்கு முன்னர் அழகாக ஒப்பனை செய்து கொள்ள வேண்டும். முகபாவங்களோடு நடனமாடும் போது பாவங்களை மேலும் மெருகூட்டி காட்டுவது ஒப்பணைகள் தான். ஆகையால் பாடசாலை காலத்திலேயே ஒப்பணை செய்வது எனக்கு மிகவும் பிடிக்கும். நான் நடனத்தை பயில ஆரம்பிக்கும் போது தான் அழுகுக்கலையில் எனக்கு ஆர்வம் பிறந்தது. இந்த ஆர்வத்தினால் அழுகுக்கலையை முறையாக கற்கவேண்டுமென்ற எண்ணம் தோன்றியது. அதன் பிறகு எனது உயர்தரத்தை பூர்த்தி செய்துவிட்டு முறையாக அழுகுக்கலை கற்கைநெறியை கற்றுக்கொண்டேன். எந்த தொழிலை நமக்கு மிகவும் பிடிக்கிறதோ அந்த தொழிலை நாம் செய்யும்போது ஆர்வம் அதிகரிக்கும். எனக்கும் அதுபோல தான். அழுகுக்கலை நான் நேசிக்கும் ஒரே துறையாகும். இதனை நேசிக்க ஆரம்பித்த காலம் முதல் இன்று வரை அதன் மேல் கொண்ட ஆர்வமும் ஈடுபாடும் சற்றும் குறைந்ததில்லை.

### இத்துறையில் நீங்கள் எதிர் நோக்கும் சவால்கள் என்ன?

அழுகுக்கலையில் இருக்கும் சவால் என்றால்வாடிக்கையாளரின்திருப்திதான். ஒவ்வொரு பெண்களுக்குள்ளிருக்கும் ரசணைகள் வேறுபடும். அவர்களின் முகத்தோற்றங்களும், தேவைகளும் வேறுபடும். ஆகவே என்னிடம் வரும் வாடிக்கையாளர்களுக்கு முதலில் என்ன தேவையென்று நான் அறிந்துகொண்டே அவர்களுக்கு ஏற்றவாறு ஒப்பணை செய்ய வேண்டியிருக்கிறது. புதிய வழிமுறைகளை கையாண்டு, புதிய நுணுக்கங்களை பிரயோகித்து வாடிக் கையாளரை திருப்திபடுத்த வேண்டும். வாடிக்கையாளரின் திருப்திதான் என் வெற்றி. ஆகவே இதனையே நான் முதல் சவாலாக பார்க்கிறேன். அழுகுக் கலை துறை என்பது நாளுக்கு நாள் புதுபிக்கப்படும் கலையாகும். நவீன காலத்திற்கு ஏற்றாற் போல் அழுகுக் கலைத்துறையும் அப்டேட் ஆகிகொண்டி ருக்கிறது.அதற்கேற்றாற் போல என்னை நானும் அப்டேட் அக வைத்துக் கொள்ள வேண்டியது எனக்கிருக்கும் சவால் ஒன்றே. அழுகுக்கலைத் தொடர் பான நம் அறிவை மெருகூட்டி நமது அந்த அறிவின் மூலம் வாடிக்கையாளர்களை மெருகூட்டவேண்டும். நான் அதனை சவாலகவே கருதுகிறேன்.மேலும் தற்கா லங்களில் வெளிநாடுகளிலிருந்து வரும் உயர்தரமான அழுகுக்கலை பொருட் களை பெற்றுக்கொள்வதில் சிரமம் ஏற் படுகிறது. எனக்கு மட்டுமல் இந்த துறையில் இருப்பவர்களுக்கு நிச்சயம் இது ஒரு சவாலாகவே இருக்கும்.

### அழுகுக்கலைத்துறையில் உங் களுக்கு கிடைத்த வாய்ப்புகளும் நீங்கள் அடைந்த சாதனைகளையும் பற்றி ஒரு சில..

வாய்ப்புகள் என்று பார்த்தோமானால் நம்முடைய சிறந்த சேவையே நமக்கான வாய்ப்பை பெற்றுத்தருகின்றது. பெற்றுக் கொள்ளும் பணத்திற்கு ஏற்ற சரியான தரமான சேவையை நாம் கட்டா யம் வழங்கவேண்டும். இது நம் கடமை. கடமையை சரியாகசெய்வதை போலவே திறமையையும் சிறப்பாக வெளிக்காட்டு கிறேன். இதன் மூலம் என்னை தேடி பல வாய்ப்புகள் வருகின்றன. குறிப்பாக நான் முதலே கூறியது போல மணப்பெண் அலங்காரத்திற்காகவே எனக்கு ஓர்டர்ஸ் நிறைய வருகின்றது. என்னை நம்பி வரும் வாடிக்கையாளர்களை அழகாக ஒப்பணை செய்து அவர்களை திருப்திபடுத்துகிறேன். என் சேவையில் மகிழ்ந்த வாடிக்கையாளர்கள் மீண்டும் ஏதேனும் ஒப்பணைக்காக என் னிடமே வருகின்றனர். இதுவே எனக்கான வாய்ப்பொன்றுதான். அழுகுக்கலைத் துறையில் சாதனைகள் என்று கூறுவதா னால் அழுகுக்கலையை முழுமையாக கற்றுக்கொள்ள வேண்டிய ஒரு ஆசை எனக்கிருந்தது. நான் அழுகுக்கலையை ஒரு துறையாக தேர்ந்தெடுக்கும் போதே டிப்ளோமாமற்றும்மாஸ்டர்கற்கைநெறிகளை பூர்த்தி செய்தேன். இது நான் அடைந்த சாதனையொன்றாகும். இந்த தொழிலில் ஏற்ற தாழ்வுகள் வந்து போனாலுமே 16 வருடங்களாக என் தொழிலை வெற்றிகரமாக நடாத்தி எனக்கென்றவொரு தனியிடத்தை வகுத்துள்ளேன். நிறைய விருதுகளையும் வாங்கி இருக்கிறேன். தொடர்ந்தும் அழுகுக்கலைத் துறையிலிருக்கும் புது புது விடயங்களை கற்று பல சாதனைகளை செய்யவேண்டுமென்ற எண்ணத்தோடும் முயற்சியோடும் செயற்பட்டு வருகின்றேன்.

### சாதிக்க நினைக்கும் பெண்களுக்கு நீங்கள் கூற நினைப்பது.


பெண்கள் வீட்டுக்குள்ளேயே முடங்கி போடக்கூடாது. தமக்கானதொரு தொழிலை செய்து தனக்கென்ற ஒரு அடையாளத்தை உருவாக்க வேண்டும். பெண்களின் வாழ்க்கை போரட்டம் நிறைந்ததாகும். வாழ்வில் எத்தனை சோகங்களும், தோல் விகளும் வந்தாலும் கூட அவற்றை எல்லாம் வெற்றிக்கான வழிகள் என்று கருதி விடாமுயற்சியோடு போராட வேண்டும். அனைத்து பெண்களும் சாதிக்கவேண்டும்!



காலைக்கதிர் Kalaikkathir

# எமது இனத்துக்கான தீர்வைப் பெற்றுவிட்டு தலைமைத்துவப் போட்டியில் இறங்குவோம்!

## தமிழ்க் கட்சிகளுக்கு நீதியரசர் விக்னேஸ்வரன் அறிவுரை



மனிதர்களின் பிறப்புக் குணாதிசயங்கள் சில அவர்களை என்றென்றும் பீடித்திருக்கக்கூடும். அவற்றை கவனத்தில் எடுத்துக் கொண்டே பலரின் நன்மைக்காக – ஓர் இனத்தின் நன்மைக்காக – அந்த இனத்தில் பாதிக்கப்பட்டவர்களின் நன்மைக்காக – நாங்கள் ஒற்றுமைப்பட்டு முன்னேறுவது நன்மையே தரும். சிலருக்கு அது தமது தலைமைத்துவத்தின் கீழ் மட்டுந்தான் நடைபெற வேண்டும் என்ற சுயநல சிந்தை இருக்க முடியும். ஆனால், அவர்களின் தலைமைத் துவம் சித்தி அடையும் வரையில் எம்மைப் பாதிக்கும் சூழல் காத்திருக்குமா என்பது தான் கேள்வி. மக்களின் ஒற்றுமையை நாம் உருவாக்கி எம் இனத்துக்கான தீர்வைப் பெற்றுவிட்டு தலைமைத்துவப் போட்டியில் இறங்கலாமே!

நாம் எம்முள் போட்டி போடுவது எமது எதிரிக ளுக்குத்தான் நன்மையைத் தரும் என்பதை நாம் மறக்கக்கூடாது. இன்றைய காலகட்டத்தில் தமிழ்த் தேசியம் பேசும் அனைத்துக் கட்சிகளினதும் ஒற்றுமை அந்தந்தக் கட்சித் தலைவர்கள் அனைவரையும் சிறந்த தலைவர்களாகவே கணிக்க வைக்கும். அதை நாம் ம றந்துவிடலாகாது.

– இவ்வாறு தெரிவித்துள்ளார் நீதியரசரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான க.வி.விக் னேஸ்வரன்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களிடம் மேலும் தெரிவித்தவை வருமாறு –

தமிழ் மக்கள் என்று இன்று அடையாளப் படுத்தப்படுபவர்கள் பலவித ஆதி மக்களின் வாரிசுகள். இலங்கைத் தமிழர்களின் பூர்வீகத்தைப் பார்த்தால் வரலாற்று ரீதியாக எமது ஆதிகால முன்னோர்கள் கும ரிக்கண்ட வாசிகளாக இருந்திருக்கலாம். அதன் பின் பாண்டியர்கள், பல்லவர்கள், சோழர்கள், சேரர்கள் இங்கு வந்ததால் அவர்களின் வழித்தோன்றல்களும் எம்முடன் கலந்திருந்தார்கள்.

ஆரிய சக்கரவர்த்திகளின் வாரிசுகளும் இங்கு வந்து எம்முடன் கலந்தார்கள். அண்மைக் காலத்தில் பிரித்தானியர்கள் தென்னிந்தியாவில் இருந்து கொண்டு வந்த மக்களும் எம்முடன் கலந்துள்ளார்கள். எம்மை எல்லாம் இணைக்கும் ஒரு மாபெரும் கருவி தான் தமிழ் எனப்படும் மொழி. அதைக் கூட பலர் பலவிதத்தில் பேசுவார்கள். எனினும் நாம் யாவரும் எம்மைத் தமிழர்கள் என்றே அடையாளம் காட்டி வருகின்றோம்.

குறைகள் என்று கூறும் போது எந்த ஒரு மனிதனும் குறைகளுக்கு அப்பாற்பட்டவராக இவ்வுலகில் வாழ்ந்ததில்லை. சகல சம்பத்துக்களுக்கும் அதிபதி யாக இருந்த ஆஜானுபவரான இராமபிரான் கூட குற்றங்களுக்கு அப்பாற்பட்டவராகக் கருதப்பட வில்லை. மறைந்திருந்து வாலியைக் கொன்றதால் இன்றும் குற்றத்திற்கு ஆளாக்கப்படுகின்றார். நிறைமா தக் கர்ப்பிணியான சீதையை வனத்திற்கு அனுப்பியதால் இன்றும் குறை கூறப்பட்டு வருகின்றார்.

தெய்வீக இயேசு பிரானைப் போல குற்றமில் லாதவர்கள் வேண்டுமெனில் கல்லை வீசலாம் என்று இன்று நாமும் கூறவேண்டிய நிலையில் உள்ளோம். எமது கட்சித் தலைவர்கள் மீது குற்றம் சுமத்துபவர்கள் தாம் குற்றம் அற்றவர்களாக முதலில் இருக்க வேண்டும்.

அண்மைக்கால மனிதருள் மிகவும் விவேகியாகக் கருதப்பட்ட விஞ்ஞானி அல்பர்ட் ஐன்ஸ்ரைன் ஒரு முக்கியமான கருத்தை வெளியிட்டிருந்தார். அதாவது, நாம் இன்றைய ஒரு நிலையை மதிப்பீடு செய்யும் போது அதன் தொடக்கத்தில் இருந்த சூழலையும் மதிப்பீடுகளையும் வைத்து இன்று கணிக்கக்கூடாது என்றார்.

இவற்றை நான் ஏன் இங்கு குறிப்பிடுகின்றேன் என்றால் எமது வரலாற்று வேற்றுமைகளையும், பழங்கால சேர, சோழ, பாண்டிய மனோநிலை வேறுபாடுகளையும் அண்மைக்கால அரசியல் முரண் பாடுகளையும் முன்வைத்து எமது எதிர்கால மார்க் கத்தை நாங்கள் வகுக்கக்கூடாது என்று அன்புடன் உங்கள் யாவர்க்கும் எடுத்துக் கூறுவதற்காகத்தான்.

எமது மொழி, கலை, கலாசாரம், வாழ்க்கை முறை, மருத்துவப் பாரம்பரியங்கள் போன்றவை தொடர்ந்தும் இந்த நாட்டில் நிலைக்க வேண்டும் என்றால் எமது ஒற்றுமை இந்தக் கால கட்டத்தில் எமக்கு மிக மிக அவசியம் ஆகின்றது.

இந்த நாடு ஒற்றுமையுடன் நிலைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் சிங்களத் தலைவர்களுடன் சேர்ந்து தமிழ்த் தலைவர்கள் சென்ற நூற்றாண்டின் ஆரம்பக் காலங்களில் பிரித்தானியர் ஆட்சிக் காலத் தின் போது அரசியல் போராட்டங்களில் ஈடுபட்டார்கள். ஆனால் சிங்களத் தலைவர்களின் மனதில் ஒரு சிறுபான்மையின மனோசிக்கல் (Inferiority complex)பொதிந்திருந்ததை யாரும் அடையாளம் காணவில்லை.

இலங்கையின் ஆட்சிமுறை வரலாற்றில் இடம்பெற்ற அரச பேரவைக் காலத்தின் போது (State Council) D.B.ஜயதிலக தலைமைத்துவத்தின் கீழ் ஒரு 'சிங்களவர் மட்டும் அரசப் பேரவை' (Pan Sinhala State Council) உருவாக் கப்பட்டது. அதற்கு அடி எடுத்துக் கொடுத்தவர் பிற்காலத்தில் அடங்காத் தமிழர் முன்னணி என்ற அரசியற்கட்சியின் தலைவராக விளங்கிய பேராசிரியர் சி.சுந்தரலிங்கம். ஆட்சியானது சுதந்திரத்தின் பின்னர் சிங்களத் தலைவர்களின் கைகளில் நிலைக்க வேண்டும், இதற்குத் தமிழர்களைக் கருவிகளாகப் பாவிக்க வேண்டும் என்ற எண்ணம் அப்பொழுதிருந்தே சிங்களத் தலைவர்களின் மனதில் எழுந்து விட்டது. நாடு இதற்காக ஒற்றையாட்சியின் கீழ் மட்டுமே சுதந்திரத்தின் பின்னர் நிலைக்க வேண்டும் என்ற பேரவா சிங்களத் தலைவர்கள் மனதை அப்பொழுதிருந்தே ஆக்கிரமித்திருந்தது. பின்வரும் இரு நூல்கள் இதற்கு சான்று பகர்கின்றன.

1. Don Stephen Senanayake – First Prime Minister of Sri Lanka by H.A.J.Hulagalle - Vijitha Yapa Publication

2. O.E.G - A biography of Sir Oliver Earnest Goonetilleka by Sir Charles Jeffries - London Pall Mall Publication

டி.எஸ்.சேனநாயகவும், ஒலிவர் குணதிலகவும் நாடு ஒற்றையாட்சியினுள் அமுங்கிக் கிடக்க வேண்டும் என்ற பேரவாவால் உந்தப்பட்டு, ஒலிவர் லண்டன் சென்று பிரித்தானிய அரசாங்கத்தால் இங்கு அனுப்ப உத்தேசிக்கப்பட்டிருந்த சோல்பரி ஆணைக்குழுவின் பிரதிநிதிகளைக் கண்டு அதற்கான ஆரம்ப ஆயத் தங்களை அவர் எடுத்திருந்தார்.

பிரித்தானியர்கள் இலங்கைக்கு சமஷ்டி முறை யிலான ஓர் அரசியல் யாப்பைத் தரக் கூடாது என்பதை உறுதி செய்ய பல திருகுதாளங்களில் அவர்கள் இருவரும் ஈடுபட்டார்கள். அந்த காலகட்டத்தில் S.W.R.D. பண்டாரநாயக்க இலங்கைக்கு சமஷ்டி முறையே சிறந்தது என்ற கருத்தைக் கொண்டிருந்தார். கண்டிய சிங்களத் தலைவர்களும் அதே மனோ நிலையைத்தான் கொண்டிருந்தார்கள். எங்கே அவர்களின் எதிர்பார்ப்பு பலித்துவிடுமோ என்ற பயத்தில்தான் டி.எஸ்.சேனநாயகவும், ஒலிவர் குணதி லகவும் சேர்ந்து பல தில்லு முல்லுகளில் ஈடுபட்டார்கள். இவற்றை எல்லாம் வெளிக்கொண்டுவரும் விதத்தில் பட்டயம் பெற்ற கணக்காளர் நண்பர் செல்வேந்திரா சபாரட்ணம் தற்போது நூலொன்றைத் தயாரித்து வருகின்றார்.

ஆகவே, சிங்கள மக்கட் தலைவர்களின் சதியின் நிமித்தமே இலங்கைக்கு ஒற்றையாட்சி முறை கிடைத்தது. அப்போதைய தமிழ்த் தலைவர் ஜீ.ஜீ. பொன்னம்பலம் சமஷ்டி முறையை விரும்பவில்லை. காரணம் சமஷ்டி முறை தமிழர்களை இலங்கையின் ஒரு கோடிக்கு அனுப்பிவிடும். முழு இலங்கையிலும் தன்னைப் போன்றவர்கள் தமது தொழிலில் கொடி கட்டிப்பறக்க அது இடம் கொடுக்காது என்ற எண்ண மாய் இருந்திருக்கக்கூடும். இதனால் ஒற்றையாட்சிக்குள் எவ்வாறு சிறுபான்மையினர் மதிப்புடன் வாழ முடியும் என்ற கேள்வியை அவர் எழுப்பி அதற்கு விடையையுங் கண்டுபிடித்தார். ஐம்பதுக்கு ஐம்பது என்ற அவரின் தீர்வே அது. ஐம்பதுக்கு ஐம்பது என்றால் ஒற்றை யாட்சியின் கீழ் பெரும்பான்மையினருக்கு 50 சதவீத மான நாடாளுமன்ற ஆசனங்கள் சிறுபான்மையினர் அனைவருக்குஞ் சேர்த்து 50 சதவீத ஆசனங்கள் என்று பொருள்படும். அதாவது பெரும்பான்மையினர் தமது 50 சதவீத வாக்குகளை வைத்துக் கொண்டு எந்த ஒரு சிறுபான்மையினத்தையும் பாதிக்கும் விதத்தில் சட்டம் இயற்ற முடியாது. சிறுபான்மையினர் ஒன்றுபட்டு நின்றால் இது சாத்தியமாகும். ஆனால் அவர் ஒன்றை மறந்துவிட்டார். பதவிக்காகவும் பணத்துக்காகவும் சிறுபான்மையினரின் ஒற்றுமையைக் குலைக்கக் கூடிய மக்கட் தலைவர்கள் அப்போதும் இருந்தார்கள், இனியும் இருப்பார்கள் என்பதை மறந்துவிட்டார். ஆகவே சிறுபான்மையினத் தலைவர்களைப் பெரும்பான்மையினர் கொக்கி வைத்து தமது பக்கத் துக்கு இழுத்துவிட ஐம்பதுக்கு ஐம்பதில் இடமிருந்தது. சோல்பரி ஆணையாளர்கள் ஐம்பதுக்கு ஐம்பதை ஏற்கவில்லை. தமிழ்த் தலைவர் ஜீ.ஜீ. சமஷ்டியைக் கேட்கவில்லை. இன்றும் தமிழ்க் காங்கிரஸின் யாப்பு ஒற்றையாட்சியையே குறிக்கோளாகக் கொண்டுள்ளது. அதன் வாரிசுக் கட்சி கூட தமிழர் ஐக்கியத்தைக் குழி தோண்டிப் புதைக்கவே காத்துக் கொண்டிருக்கின்றது. அவர்களின் அரசியல் நிலைப்பாடுகள் அந்தத் தீர்வையே சுட்டிக் காட்டிக் கொண்டு நிற்கின்றன.

சோல்பரி அரசியல் யாப்பு ஒற்றையாட்சியையே சுட்டி நின்றது. பெரும்பான்மையினர் நினைத்ததைச் செய்து முடிக்க அரசியல் யாப்பு இடமளித்தது. சிறுபான்மையினரைப் பாதுகாப்பதற்காக சோல்பரி ஆணையாளர்கள் அவர்களின் அரசியல் யாப்பில் உள்நுழைத்த உறுப்புரை 29(2)இன் ஏற்பாடுகளுக்கு முரணாகவே 'சிங்களம் மட்டும்' கொண்டு வரப்பட்டது. 'சிங்களம் மட்டும்' சட்டம் அரசியல் யாப்பின் உறுப்புரை 29(2)இன் ஏற்பாடுகளுக்கு முரணானது என்று மாவட்ட நீதிமன்றத்தில் (பறங்கிய வம்சாவளியினரான) டி க் ரெட்சர் என்ற நீதிபதி, கோடீஸ்வரன் வழக்கில் தீர்ப்பளித்திருந்தார். ஆனால் வழக்கின் மேன்முறை யீட்டைத் திசை திருப்பி பிரிவி கவுன்ஸில் (Privy Council)) வரை கொண்டு சென்று, அவர் தந்த தீர்ப்பை மழுங்கச் செய்துவிட்டன தொடர்ந்து வந்த சிங்களப் பெரும்பான்மையின அரசாங்கங்கள்.

தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் சிங்கள மக்கட் தலைவர்கள் ஒற்றுமையுடன் நடந்துகொள்வதை நாம் பார்த்து வருகின்றோம். 'ஒரு மொழி இரு நாடுகள், இரு மொழிகள் ஒரு நாடு' என்று கூறிய சரித்திர வல் லுநர், சட்ட வல்லுநர், இடது சாரிக் கொள்கையாளரான கலாநிதி கொல்வின் ஆர்.டி. சில்வா தான் 1972 ஆம் ஆண்டின் குடியரசு அரசியல் யாப்பைக் கொண்டு வந்தார். அதனூடாக முன்னைய அரசியல் யாப்பின் உறுப்புரை 29(2) நீக்கப்பட்டது. அரசியல் யாப்பில் சிங்கள பௌத்த ஏகாதிபத்தியம் நிலை நிறுத்தப்பட்டது. அதையொட்டியே 1978 ஆம் ஆண்டின் அரசியல் யாப்பும் வகுக்கப்பட்டது. இன்று சிங்கள பௌத்த பெரும்பான்மையினர் நாட்டை சிங்கள பௌத்த நாடாக மாற்ற பகீரதப் பிரயத்தனங்களில் ஈடுபட்டுக் கொண்டுள்ளார்கள். புதிய அரசியல் யாப்புத் தயாரிப்பு அந்தத் திக்கையே சுட்டிக் காட்டிக் கொண்டு நிற்கின்றது.

இப்பொழுது தான் சிறுபான்மையினரின் ஒற்றுமை வெகுவாக வேண்டப்படுகிறது. இதை இன்றைய ம லையக மற்றும் முஸ்லிம் தலைவர்கள் சிலர் புரிந்து கொண்டுள்ளார்கள். ஆனால் தமிழ்த் தலைவர்கள் சிலரினுள் ஆணவம் தலை விரித்தாடுகின்றது. தமிழ்த் தலைவர்கள் இடையே ஐக்கியம் ஏற்படுவதை எப்படியாவது குலைக்க வேண்டும் என்று கங்கணம் கட்டி நிற்கின்றார்கள்.

இந் நிலையிலே இன்றையத் தமிழ்த் தலைவர்கள் சிங்களத் தலைவர்களின் சிந்தனைகளையும், மனோநிலையையும், உலக அரசியல் நிலையையும், இந்திய இலங்கை உறவு நிலையையும், ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் குறிக்கோள்களையும் அதன் நடவடிக்கைகளையும் நாட்டின் நிதி நிலைமைகள், யதார்த்த நிலைகள் போன்ற பலவற்றையும் மனதிற் கொண்டு கருமமாற்ற வேண்டிய ஒரு கடப்பாட்டிற்குள் தள்ளிவிடப்பட்டுள்ளார்கள்.

எங்களை நாங்களே விமர்சித்துக் கொண்டு ஒருவருக்கொருவர் முட்டுக்கட்டைகளை அடுத்தவர் முன் வைத்துக் கொண்டு நாங்கள் தொடர்வது எமக்கு அழிவையே தரும். சிங்களப் பெரும்பான்மைக் கட்சிகளுடன் கைகோர்த்து நின்று அரசியல் செய்யும் எமது தமிழ் அரசியல்வாதிகள்

(7 ஆம் பக்கம் பார்க்க)

# விமல், கம்மன்பில மற்றும் வாசுதேவ உள்ளிட்டவர்கள் எதிர்க்கட்சியில் தனிக் குழுவாகச் செயற்பட வேண்டும்

## நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார வலியுறுத்து

விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில மற்றும் வாசுதேவ நாணயக்கார ஆகியோர் இந்தத் தருணத்தில் எதிர்க்கட்சியில் தனிக் குழுவாக செயற்பட வேண்டும் என எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது. கண்டியில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார இதனைத் தெரிவித்தார்.

அரசாங்கத்துக்குள் இருந்துகொண்டு விமர்சனங்களை முன்வைப்பதற்குப் பதிலாக, மூன்று உறுப்பினர்களும் எதிர்க்கட்சியில் அமர்ந்து அரசை விமர்சிக்க வேண்டும் எனக் கூறினார்.

மேலும் இந்த அரசாங்கம் தோல்வியடைந்துவிட்டது என்றும் தேர்தல் ஒன்று வந்தால் மக்களே இவர்களை வீட்டுக்கு அனுப்புவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள அதேநேரம் விவசாயிகளின் வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளது என்றும் நளின் பண்டார கூறினார்.

பொருளாதாரத்தின் முதுகெலும்பு விவசாயிகளே என்பதை அரசாங்கம் அறியாதமையின் விளைவையே நாடு தற்போது அனுபவித்து வருவதாகவும் நளின் பண்டார குறிப்பிட்டார்.

# உலக வங்கியின் உதவியுடன் வீதி அபிவிருத்தித் திட்டங்கள்

உலக வங்கியின் உதவியுடன் முழு நாட்டையும் உள்ளடக்கிய 3,000 கிலோமீற்றர் வீதிகளை அபிவிருத்தி செய்யும் ஒருங்கிணைக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இரத்தினபுரி மாவட்டத்தில் பல வீதிகளின் அபிவிருத்தித் திட்டங்கள் ஆளும் தரப்பு பிரதம கொறடா நெடுஞ்சாலை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் தலைமையில் அண்மையில் இடம் பெற்றது.

அதன்படி, கும்பகொட ஆரா சந்தியிலிருந்து கடதாசிச் தொழிற்சாலை – தலாவ வீதி (4.15 கி.மீ.), கலகெடி ஆரா – நுகே குறுக்கு வீதி (1 கி.மீ.), ஹிங்குர ஆரா – கெட்டகல் ஆரா வீதி, ஹிங்குரா ஆரா பழைய வீதி, ஹிங்குரா ஆரா கிராம வீதி (கி.மீ. 4.4), வெலேகும்புர சீதாகல, உட கந்த வீதி (8.10 கி.மீ), பம்பஹின்ன கிஞ்சிகுனே வீதி (2.8 கி.மீ) மற்றும் தம்புலுவான கல்துர வீதி (2 கி.மீ.) என்பவற்றின் அபிவிருத்தித் திட்டங்களுக்காக 833 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# மக்களின் கோரிக்கைகளை சரியாக நிறைவேற்றுபவர்கள் ராஜபக்ஷர்களே!

## இந்திக அனுருத்த பெருமிதம்



மக்களின் கோரிக்கைகளை சரியாக நிறைவேற்றுபவர்கள் இந்தராஜபக்ஷர்களேஎன்பதை நான் பொறுப்புடன் கூறுகின்றேன் என கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டடப் பொருள் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் இந்திக அநுருத்த தெரிவித்துள்ளார்.

உங்களுக்குவீடு–நாட்டுக்கு எதிர்காலம் வீடமைப்பு உதவித் திட்டத்தின் அம்பாந்தோட்டை மாவட்ட ஆரம்ப விழாவின் போது கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

இந்தத் திட்டத்துக்கான முழு ஆலோசனையும், அனுசரணையும் மற்றும் வழிகாட்டுதலும் பிரதமரால் வழங்கப்பட்டது. இந்த வருடத்துக்கான எமது இலக்கு 30 ஆயிரம் வீடுகளாகும். இதுவரை 24 ஆயிரம் வீடுகளின் பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளன.

உண்மையான பிரச்சினையை அடையாளம் கண்டு உண்மையானபிரச்சினைக்குப் பதிலளிக்கும் அரசியல் பிரமுகர்கள் இந்த நாட்டில் மிகக் குறைவு. அவ்வாறு உண்மையான பிரச்சினைக்குப் பதில் சொல்லக்கூடிய அரசியல் பிரமுகர் ஒருவர் இருப்பாராயின் அது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஒருவரே. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கீழ் மக்களுக்கு நியாயமானதை வழங்குபவர்கள் தற்போதைய பிரதமர் உட்பட இந்த ராஜபக்ஷர்களே தவிர வேறு யாரும் இல்லை என்பதை இந்த நாட்டு மக்களுக்கு நாம் பொறுப்புடன் கூறுகின்றோம். மேலும், மக்களின் கோரிக்கைகளை சரியாக நிறைவேற்றுபவர்கள் இந்தராஜபக்ஷர்களேஎன்பதை நான் பொறுப்புடன் கூறுகின்றேன். எனத் தெரிவித்துள்ளார்.

# எமது இனத்துக்கான....

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி......)

சுயமுன்னேற்றத்திற்காகச்சிங்களப்பெரும்பான்மையினரை நாடியவர்கள். இவர்களின் எண்ணம், சுயநல காரியங்களுக்காக பெரும்பான்மையினத் தலைவர்கள் முன் கைகட்டி நின்று அவர்களிடம் இருந்து சலுகைகளைப்பெற்றுதம்மையும்தம்மைச்சார்ந்தவர்களையும் விருத்தியடையச் செய்வதே. அவர் களுக்கு வருங்காலம் பற்றியும் தமிழ் மக்களின், தமிழ் மொழியின், தமிழ்ப் பாரம்பரியத்தின் எதிர்காலம் பற்றி யும் எந்தவித கரிசனையும் இல்லை.

'இன்று நாம் சுகித்து வாழ்வோம் நாளை பற்றி நமக்கென்ன கவலை' என்ற மனோநிலையில் எவர் முன்னும் பல்லிளிக்கவும் அவர்கள் தருவதைக் கையேற்கவும், அவர்கள் முன் அவர்கள் சொற்படி நடக்கவும் ஆயத்தமாக நிற்கின்றார்கள். அதற்காக எமது தமிழ் அலுவலர்களைப் பகைக்கவும் அவர்கள் ஆயத்தமாக இருக்கின்றார்கள். அவர்களின் இந்த மனோநிலையை சிங்களத் தலைவர்கள் நன்றாக அறிவார்கள். அதனால் அவர்களைக் கொண்டே எம்மவரை அழிக்க திட்டம் போட்டுக் கொண்டு நிற்கின்றார்கள். அதையறியாமல் எமது தமிழ் பேசும் தலைவர்கள் சிலர் கையாளகளாக, அடிவருடிகளாக, ஏவல்காரர்களாக நடந்து ஒத்துழைப்பைமத்தியஅரசாங்கத்திற்குநல்கிவருகின்றார்கள்.

இந்த நிலையில் நாம் நிலைமையைக் கிரகித்து ஒற்றுமையுடன் அரசியலில் அடியெடுத்து வைக்கும் கட்டத்தை அண்டியுள்ளோம்.

'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே – ஒற்றுமையின்றேல் அனைவர்க்குந் தாழ்வே'

என்பது தமிழர்களின் முதுமொழி.

அதனைத் தமிழர்களே மறந்து வாழலாமா? நான் அண்மையில் எங்கோ கூறியது போல் தமிழ்த் தேசீயத்தை வலியுறுத்தும் கட்சிகளான தமிழரசுக் கட்சி, TELO, PLOTE,TNPF,EPRLF,TNP, சுயாட்சிக் கழகம் மற்றும் எமது தமிழ் மக்கள் கூட்டணி என்பவற்றின் அரசியல் குறிக்கோள் சமஷ்டியே. அதில் அவர்கள் ஒற்றுமைப்பட்டே நிற் கின்றனர்.

ஒரு வேளை எமது தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி சற்று முன்னேறி கூட்டு சமஷ்டியை (Confederation) வலியுறுத்தி நிற்கின்றோம் என்று கூறலாம். ஆனால் அடிப்படையில் நாம் வேண்டுவது சமஷ்டியையே. தமிழ்க் காங்கிரஸின் யாப்பு எப்படி இருப்பினும் அவர்களின் தற்போதைய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வேண்டுவது சமஷ்டியையே. பின் ஏன் எங்களுள் பிரிவினை?

நான் ஏற்கனவே கூறினேன் 'குறை கூறமுடியாத ஒருவர் மனிதர்களுள் இருக்க முடியாது' என்று. அவதார புருஷர்கள் கூட குற்றவாளிகளாக இனங்காணப்பட்டார்கள் அவர்கள் காலத்தில்.

அடுத்தது ஒரு பிரச்சினை எழுந்த காலத்தில் இருந்த சூழலை வைத்து அந்தப் பிரச்சினைக்குத் தற்போது அதே வழியில் தீர்வைப் பெறமுடியாது என்று ஐன்ஸ்டைன் கூறியதையும் நினைவுப்படுத்தினேன். அவர் கூறினார் "The world will not evolve past its current state of crisis by using the same thinking that created the situation" இன்றிருக்கும் பிரச்சினையைத் தீர்க்க பிரச்சினை ஏற்பட்ட காலத்தில் இருந்த சிந்தனையை வைத்து தீர்வு காணமுடியாது. அன்று போர் நடந்து கொண்டிருந்தது இன்று அப்படியல்ல.

ஆயுதமேந்திய அனைவரும் மனிதர்களே. ஆகவே அவர்களில் சிலர் குற்றமிழைக்கவில்லை. மற்றவர்கள் தான்குற்றம்இழைத்தார்கள்என்றுகூறுவதில்பயனில்லை. அன்று அவ்வாறு நடந்து கொண்டவர்கள் இன்றும் அவ்வாறே நடந்து கொள்வார்கள் என்று கூறுகின்றமை இன்றைய சூழலையும் அன்றைய சூழலையும் புரிந்து கொள்ளாது பேசும் பேச்சாகும்.

ஆனால் மனிதர்களின் பிறப்புக் குணாதிசயங்கள் சில அவர்களை என்றென்றும் பீடித்திருக்கக்கூடும். அவற்றை கவனத்தில் எடுத்துக் கொண்டே பலரின் நன்மைக்காக, ஓர் இனத்தின் நன்மைக்காக, அந்த இனத்தில் பாதிக்கப்பட்டவர்களின் நன்மைக்காக நாங்கள் ஒற்றுமைப்பட்டு முன்னேறுவது நன்மையே தரும். சிலருக்கு அது தமது தலைமைத்துவத்தின் கீழ் மட்டுந்தான் நடைபெற வேண்டும் என்ற சுயநல சிந்தை இருக்க முடியும். ஆனால் அவர்களின் தலைமைத்துவம் சித்தி அடையும் வரையில் எம்மைப் பாதிக்கும் சூழல் காத்திருக்குமா என்பது தான் கேள்வி. மக்களின் ஒற்றுமையை நாம் உருவாக்கி எம் இனத்துக்கான தீர்வைப் பெற்றுவிட்டு தலைமைத்துவப் போட்டியில் இறங்கலாமே!

நாம் எம்முள் போட்டி போடுவது எமது எதிரிகளுக்குத்தான் நன்மையைத் தரும் என்பதை நாம் மறக்கக்கூடாது. இன்றைய காலகட்டத்தில் தமிழ்த் தேசியம் பேசும் அனைத்துக் கட்சிகளினதும் ஒற்றுமை அந்தந்தக் கட்சித் தலைவர்கள் அனைவரையும் சிறந்த தலைவர்களாகவே கணிக்க வைக்கும். அதை நாம் மறந்து விடலாகாது.

இலங்கைத் தமிழர்கள் விடயத்தில் எமது முன்னோர்கள், நாம், பிரித்தானியா, இந்தியா, அமெரிக்கா மற்றும் ஏனைய நாடுகள் விட்ட தவறுகளைத் தொடர்ந்து பேசுவதில் பயனில்லை. ஐ.நா. சபை போன்ற சர்வதேச நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்கள் போன்றன விட்ட தவறுகளைப் பேசிப் பயனில்லை. இன்று, எமது அஹிம்சைப் போராட்டங்களுக்குப் பின்னர், ஆயுதப் போராட்டங்களுக்குப் பின்னர் ஓர் ஆபத்தான காலகட்டத்தை எட்டியுள்ளோம். காணிகள் பறிபோகின்றன. சிங்களமொழியின் பிரயோகம் வடக்கு கிழக்கில் அரசாங்கத்தால் மும்முரமாகத் திணிக்கப்பட்டு வருகின்றது. கலாசார, வரலாற்று அழிப்புக்கள் நடைபெற்று வருகின்றன. எமது நல்ல கல்லூரிகள் மாகாணத்திடம் இருந்து மத்திக்கு தேசியப் பாடசாலைகள் என்ற போர்வையில் கையேற்கப்பட்டு வருகின்றன. இராணுவம் தம்மைப் பலமாக இங்கு நிலை நிறுத்தியுள்ளார்கள். தமிழ் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்கள் வெகுவாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் கட்சித் தலைவர்கள் யாவரும் ஒன்றிணைந்து கடமையாற்றுவது வெறும் உசிதம் அல்ல உச்ச கட்ட யுக்தியாகும்.

இதனை உணர்ந்து தான் அண்மையில் 6 கட்சிகள் சேர்ந்து கௌரவ மோடிக்குக் கடிதம் அனுப்பினோம். ஐந்து கட்சிகள் சேர்ந்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளருக்குக் கடிதம் அனுப்பினோம். ஆணையாளரின் உயர் மட்ட அலுவலர்களுடன் Zoom இல் பேசினோம்.

இன்று வெள்ளம் தலைக்கேறிவிட்டது. ஒற்றுமையின்றேல் அனைவர்க்குந் தாழ்வே என்ற கட்டத்தை நாம் அனைவரும் அடைந்துள்ளோம். பெரும்பான்மையினக் கட்சிகளுடன் சேர்ந்திருப்போருக்கு அது தெரியாமல் இருக்கலாம். ஏனென்றால் சுயநலம் அவர்கள் கண்களை மூடியிருக்கும். ஆனால் தமிழ்த் தேசியம் பேசுவோருக்கு அது புரிந்திருக்கும்.

தமிழ்த் தேசியம் பேசுவோரில் தமிழ் மீதும் தமிழர் மீதும் கூடிய அக்கறை கொண்டவர்கள் யார் என்ற கேள்விக்கு விடை காணப்புகின் தமிழ் மக்களே பாதிக்கப்படுவார்கள். தமிழ் மக்களின் முன்னேற்றமும், பாதுகாப்பும், வாழ்வியல், பொருளாதார அபிவிருத்திகளும், எமது பாரம்பரிய பூமியில் வருங்காலத் தமிழின நிலையான இருப்பும் முக்கியமாகக் கருதப்படவேண்டும். முன்னைய தமிழ்த் தலைவர்கள் கருத்தொருமித்தலால் வழக்குகளை வென்றார்கள். ஆனால் உண்மையான ஒற்றுமையை அரும்ப வைக்க அவர்களால் முடியவில்லை.

இன்றைய தமிழ்த் தலைவர்கள் கருத்தொருமித்தலால் ஒன்று சேர்ந்து வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையைப் பெற வேண்டும். சர்வதேச நிலைமைகள் பூகோள அரசியற் சூழல் ஆகியன சாதகமாக வந்து கொண்டிருக்கும் இவ் வேளையில் நாம் எமதுதனிப்பட்ட விருப்புவெறுப்புகளுக்கு இடமளியாமல் எமது மக்களின் வருங்காலம் பற்றிச் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும்.

தேர்தலின் போதான கட்சிகளின் சுயலாப நோக்கங்கள், கட்சித் தலைவர்களின் சுயநல ஏக்கங்கள் போன்றன தனிப்பட்ட விரோத மனப்பாங்குகள், பேதங்கள், ஈகோ அல்லது அகந்தை நிறை சிந்தனைகள் ஆகியவற்றைத் தாண்டி நாம் ஒற்றுமை காப்பது அவசியம். தமிழரின் விடியலுக்காக திறந்த மனதுடன் கலந்துறவாடி ஓர் ஒற்றுமை ஒன்றியத்தை உருவாக்குவது அவசியம். அதன் பின்னர் அரசாங்கத்துடனும் சர்வதேசத்துடனும் பேசுவோம். நிலத்திலும், புலத்திலும், தமிழகத்திலும் உள்ள தமிழுறவுகள் இவ்வாறான ஒற்றுமைக்கு உறுதுணையாக இருக்க வேண்டும். ஒன்று சேர்ந்து ஒரு சமஷ்டி அரசியல் யாப்பை இலங்கையில் உருவாக்கப் பாடுபடுவோம்.

அதன் பின் வரும் சமஷ்டி அரசை யார் வழி நடத்த வேண்டும் என்பதில் நாங்கள் கட்சிகள் ரீதியாகப் போட்டிகளில் ஈடுபடலாம். இன்றைய சூழலைப் புரிந்து கொண்டு காய் நகர்த்துவதே தமிழ்த் தேசியக் கட்சித் தலைவர்களின் இன்றைய தலையாய கடப்பாடாகும்.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் - 303**

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

இந்தத் தொடரை எழுதத் தொடங் கிய போது, இனப்படுகொலை என்றால் என்ன எனும் சட்ட வரைமுறைகளையும் அவை தொடர்பான சர்வதேச அணுகு முறைகளை யும் விரிவாக – ஆனால் அதே சமயம் பொதுமக்கள் விளங்கிக் கொள்ளக்கூடிய விதத்தில் – சொல்வதே என் நோக்கமாக இருந்தது.

பின்னர் பலரது கருத்துக்கள் இழை யோடியமையால் ஓரளவு இனப்படு கொலைக்குப் பக்கபலமாக – பக்கச் சரித் திரமாகக் கட்டவிழ்ந்த – தமிழ் மக்களி னதும் பிராந்திய, சர்வதேச அரசியலினதும் வரலாறு சிலவற்றையும் குறித்து அந்த வழிகளில் கட்டுரைத் தொடர் வளர்ந்தது.

பலர், இவ்வளவு விடயப் பரப்பையும் தெளிவாக அப்படியே சொல்லக் கூடியதாக இருக்கிறதே, அவற்றின் ஆதாரங்களை, பின்னணிகளை எப்படி அறியக்கூடிய தாக இருந்தது, படித்தீர்களா, வாய்மொழி யாகக் கேள்விப் பட்டீர்களா என வினவி னார்கள்

இவற்றில் சுமார் எழுபது வீதமானவை நான் இவ்விடயங்களில் ஈடுபட்ட காலத்தி லிருந்து நேரடியாகவே அறிந்துகொண் டவை மூலம் கோர்த்து எழுதப்பட்டவை.

1976 இல் இருந்து தமிழ் மக்களின் இடர்களிலும் அபிலாசைகளிலும் ஆதரவு தந்த தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் (TRRO) என்ற கட்டமைப்போடும், அதன் உப அமைப்புகளோடும் நான் பணியாற்றிய காலத்தில் இருந்து, அதன் மூலம் எல்லாத் தமிழ்த் தரப்புக்களோடும் எனக்குக் கிட்டிய உறவுகள் தந்த அனுபவங்களும் இதில் அடங்கும்.

சன்சோனி ஆணைக்குழுவின் முன் பணியாற்றிய காலத்தின் போதும் தேடிய, ஆராய்ந்த, பெற்றுக்கொண்ட, படித்த ஆவணங்கள் அனேகம். அவற்றில் பல சிங்கள அமைப்புக்களால் சமர்ப்பிக்கப்பட்டவை. நான் பிரதி பண்ணி பாதுகாத்து வைத்தவை. எல்லாமே 1983 கலவரங்களில் எனது அலுவலகம் எரிக்கப்பட்டபோது காப்பாற்ற முடியாமல் போயிற்று.

அது போலவே வேறு சில அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த ஆவணங்கள், கடிதங்கள் என்பவற்றை பாதுகாப்புத் தரப்பினரின் சோதனைகளுக்கு அஞ்சி, அத்தகைய சோதனைகளை எப்பொ முதுமே எதிர்பார்த்திருந்த காரணத்தி னால், எனக்கு மிக நெருக்கமான – பாகிஸ் தான் பின்னணி கொண்ட – நண்பர் ஒருவரின் வீட்டில் வைத்திருந்தேன். அவருக்கும் அவற்றின் பாதுகாப்பு நோக் கங்கள் தெரிந்து இருந்தமையால் அவற் றைத் தனது வீட்டு கூரையில், சாரளங் களுக்கு இடையில் சொருகி வைத்துத் தான் பாதுகாக்கின்றார் என்று கூறியி ருந்தார். நான் 14 வருடங்களின் பின் முதன் முதலாக ஸ்ரீலங்காவுக்குத் திரும் பிப் போனபோது அவர் இறந்திருந்தார். அவரது மனைவியைச் சந்தித்த பொழுது தங்கள் மகன் அந்த வீட்டை விற்று விட்டார் என்றும், வாங்கியவர் அதனை இடித் துப் புதியது ஒன்றைக் கட்டியுள்ளார் என் றும் தெரிவித்தார். எனது ஆவணங்கள் வீட்டின் இடிபாடுகளோடு சென்றிருக் கும். அவற்றில் சில, பாலசிங்கம் விடுத லைப் போராளிகளுடன் இணையும் முன் அவர்களைப் பற்றிய அபிப்பிராயங்களை குறிப்பிட்டு எனக்கு எழுதியவை மற்றும் தான் பதிப்பிக்க விரும்பிய ஆவணத்தின் நகல் என்பன. அத்தோடு இரத்தினசபா பதி, சங்கர் ராஜி போன்றோர் அனுப்பி வைத்த விடுதலைப் புலிகளுடனான கணக்கு வழக்குகள்(இவை விடுதலைப் புலிகளின் அங்கத்தினர்களை பலஸ் தீன விடுதலை இயக்கங்களுக்கு அனுப் பிய செலவுகள்), கன்னாட்டி பண்ணையை ஒட்டிய பேச்சுவார்த்தைகள் தொடர்பான ஆவணங்கள் போன்றவை .

1984இல் ஆஸ்திரேலியாவுக்கு வந்த பின் என்னால் சேகரித்து பாதுகாக்கப்பட் டவைகளுடன் நான் தொடர்ந்து ஈடுபட்டு, அவற்றில் இருந்து நேரடி அனுபவங்க ளாகவும் வெளிநாட்டில் அன்று புலம் பெயர் அங்கத்தினரின் அவதானிப்பு பார்வையாக சிலவற்றையும் அறிந்தேன். இந்தக் காலங்களில் இவற்றை உறுதி செய்யக்கூடிய விதத்தில் விடுதலைக்கு குழுக்களில் இயங்கிய சிலரின் நூல்கள் சிலவும் வந்து சேர்ந்து உதவி தந்தன.

நான் வடித்த வரலாற்றுப் பக்கங்கள் பக்கச்சார்பானவையாக இல்லை, ஒரு நடுநிலையில் எழுதப்பட்டு இருக்கின்றன எனப் பலர் எனக்கு ஆதரவுக் கருத்தாக் கங்கள் செய்தார்கள்.



சிவகுமாரனின் தற்போதைய சிலை

ஆனால் அவர்களில் பலரும் விரக்தி யையும் வெளிப்படுத்தினார்கள். இவற் றைச் சொல்வதனால் என்ன பயன்? இவற்றைக் கேட்கவா போகிறார்கள்? – என்று ஆதங்கங்களையும் வெளிப்படுத்தி னார்கள். ஆதரவான கருத்துக்கள் நெஞ் சுக்கு நிறைவாக இருந்தன.

எனது கருத்தாக்கங்களில் நான் குறிப்பிட்ட அரசியல் தலைவர்கள் பலரை – சம்பந்தன் முதற்கொண்டு – மிக அன் னியோன்னியமாக நான் அறிவேன். குமார் பொன்னம்பலம், நீதியரசர் விக் னேஸ்வரன், சிவாஜிலிங்கம், செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன், டக்ளஸ் தேவானந்தா, ஸ்ரீகாந்தா, சுரேஷ் பிறேமச் சந்திரன், கஜேந்திரகுமார், சுமந்திரன், கருணா, பிள்ளையான் போன்றோர் பற் றிய கருத்துக்களை அவர்களை நான் நன்கு அறிந்திருந்தும் விமர்சனமாகத் தந்தேன். அவை தமிழ் மக்களது நிலை யிலிருந்து பார்க்கப்பட்டனவேயொழிய, அவர்களுக்கு எதிரான மாற்று அரசியலுக் காகவோ அன்றில் அவர்களுக்கு உதவிக் கான அரசியல் நிலைப்பாடாகவோ எழுதப்பட்டவை அல்ல.

அதுபோல எழுதப்பட்ட வரலாறுகளில் ஏதாவது தப்பிதமானவை என்றோ அவை முரண்படுகின்றன என்றோ ஒருவரும் இதுவரை என்னுடன் தர்க்கிக்கவில்லை. அது எனக்கு சந்தோஷத்தைத் தந்தது. கனடாவிலிருந்து வணபிதா இமானுவல் அடிகளாரின் நண்பரொருவர், உலகத் தமிழர் பேரவை நிறுவ பிரான்ஸில் நடந்த முதல் கூட்டத்தில் சம்பந்தன் பங்கு பெற வில்லை எனவும், அவர் பின்னர் லண்ட னில் நடந்த அங்குரார்ப்பணக் கூட்டத்தில் தான் கலந்து கொண்டார் எனவும் தெரி வித்தார். அதுதான் சரியானது. சம்பந்தன் லண்டனில்தான் பங்குபற்றினார்.

புலம்பெயரில், நமது தமிழ்த் தலைவர் களின் படங்களை சப்பாத்துக் கால்களால் உதைப்பதும், அவர்களை தூஷணத்தால் ஏசுவதும் தமிழ் மக்களது பண்பியல்பு அல்ல என்றும், அவை அவர்களின் ஆக் ரோஷமான நடத்தையாகப் பார்க்கப்படும் என நான் குறிப்பிட்ட போது ஒரு வாசகர் அந்தக் கூற்று தவறு என மறுத்தார்.

அது (எனது கருத்து) போரின் பிறகு வந்த எல்லா இளைஞர்களும் அப்படி யான செயல்களில் ஈடுபடுகின்றனர் என அடையாளப்படுத்துகிறது, இவ்வகையான செயல்களில் ஈடுபடுபவர்கள் சிலரே, அவர் களும் ஆங்காங்குள்ள சிலரால் அப்படி வழிநடத்தப்படுகிறார்கள், அந்த இளை ஞர்கள் அவர்களை அண்டி இருக்கின் றமையால் மறுப்பதற்கு முடியாமல் இப் படிச் செயற்பட வேண்டியவர்களாக இருக் கிறார்கள், ஆனால் அவர்களுக்கு இருக் கும் வலியைப் புரிந்து கொள்ள வேண் டும், அவர்கள் எல்லாம் முடிந்து ஒரு வாழ் வுக்கு நிர்கதியாய் இருக்கும்போது இப் படிப்பட்ட தலைவர்கள் செய்வது அவர் களது உணர்ச்சியைக் கிளறி ஆத்திர மூட்டும் என்று சுட்டிக் காட்டினார். எப்படி யாயினும் புலம் பெயரில், அதன் அரசி யல் கலாசாரத்தில், இப்படியான செயல் களை ஆற்றுவோரை ஆக்ரோஷ மனப் பான்மை உள்ள மனிதர்கள் என்றும், ஒரு பானை சோறுக்கு ஒரு சோறு பதம் என்பது போலவும் பார்ப்பார்கள் என விளக்கினேன்.

சிவகுமாரன் பற்றிய எனது ஆக்கங் களைப் பார்த்த பலர், பொதுவெளியில் இவை எப்பொழுதோ பேசப்பட்டு இருக்க வேண்டும் எனக் கருத்துத் தெரிவித்தார் கள். அவர்களில் சிலர் அவரோடு (சிவகு மாரனோடு) இயங்கியவர்கள். தற்போது ஒதுங்கி, ஓரமாக இருந்து, ஊரில் பாதிக் கப்பட்டோருக்கு முடிந்த அளவில் உதவி செய்கிறார்கள் எனக் கூறினார்கள். சிவ குமாரனுடன் அந்த இறுதிக் கட்டத்தில் பேசிய மாணவிகள் இப்போதும் பல நாடுகளில் வாழ்கிறார்கள் எனவும் அவர் களது பெயர்களைக் குறிப்பிட்டார்கள். நான் அவை தெரிந்து இருந்தும், அவற்றை குறிப்பிட விரும்பாமலேயே தவிர்த்தேன் எனத் தெரிவித்தேன்.

சிவகுமாரன் பற்றிப் பேசியவர்கள் இன்னும் அதே உணர்ச்சிகளில், நாட்டில் பாதிக்கப்பட்டோருக்கு உதவிகள் செய் வதைக் கேட்ட போது மனம் குளிர்ந்தது. அவர்களில் மனிதம் சாகவில்லை, தமி ழரின் அபிலாசைகளுக்கு இன்னும் சாவுமணி அடிக்கப்படவில்லை என்பது போன்ற ஒரு நம்பிக்கை வந்தது.

அப்படி பேசியவர்களில் ஒருவர் சிவ குமாரனின் இந்தச் சிலைகளை வடித்த வர்களின் பெயர்களை குறிப்பிட்டிருந் தால் அது அழகியலுக்கும் பிரயோசன மாக இருக்கும் என்று கூறினார். விசாரித்து அறிந்த வரையில் முதலாவது சிலை ஓவியர் ரமணியால் செய்யப்பட்டது என வும், அதற்கான ஏற்பாடுகளைத் தாங்களே செய்தார்கள் எனவும் சிலை அமைக்கும் பொறுப்புகளில் இருந்த நித்தி கூறினார். அவருடைய அபிப்பிராயத்தில் உடைக் கப்பட்ட சிலையை திருத்தி மீண்டும் நிறுவியவரும் ஓவியர் ரமணிதான்.

ஓவியர் சிவப்பிரகாசம் என்ற சிற்பியே டக்ளஸினால் திறந்து வைக்கப்பட்ட தற்போதைய சிலையை வடிவமைத்தவர் எனவும் தகவல் தரப்பட்டது. இதையொட் டிய மேலும் தகவல்கள் இருந்தால் பகிர்ந்து கொள்ளலாம்.

(நாளையுடன் தொடர் முற்றும்)

## மாணவி கோடரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
திரும்பும் வழியிலேயே இந்தக் கொடூர சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பழைய தகராறு ஒன்றின் அடிப்படையில், மாணவியின் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளமை ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் தலைமறைவாகியுள்ளார். ஹாலி எல பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

---

## சம்பந்தனுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தனை நேற்றுக் காலை கொழும்பில் சம்பந்தனின் இல்லத்தில் சந்தித்துப் பேசினார் அமெரிக்கத் தூதுவர்.

அந்தச் சந்திப்பின் பின்னர் தாம் வெளியிட்ட டுவிட்டர் செய்தியிலேயே மேற்படி விடயத்தை அமெரிக்கத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

ஜனநாயக ஆட்சி முறைமை, மனித உரிமை விவகாரங்கள், இலங்கையின் பல்வேறு சமூகங்களின் பொருளாதார வளர்ச்சி உட்பட பல விடயங்கள் குறித்து தொடர்ந்தும் பேசப்பட இருப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சந்திப்பில் கூட்டமைப்பின் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ.சுமந்திரன் எம்.பியும் பங்குபற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

(இந்தச் சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் பற்றிய மேலும் சில தகவல்கள் இன்றைய இனி இது இரகசியம் அல்ல' பந்தியில் இடம்பெற்றுள்ளன.)

---

## காணாமல்போனோர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பேச்சாளரும் அமைச்சருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முற்பகல் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

2016 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் காணாமல்போன ஆள்கள் பற்றிய அலுவலகம் நிறுவப்பட்டுள்ளது. குறித்த அலுவலகத்தால் மாத்தறை, மன்னார், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மற்றும் கிளிநொச்சி போன்ற பிரதேசங்களில் பிராந்திய அலுவலகள் நிறுவப்பட்டுள்ளதுடன், அப்பிராந்திய அலுவலகங்களுக்கு காணாமல் போனமை தொடர்பான 14 ஆயிரத்து 988 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய முறையான விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் காணாமல்போன ஆள்களின் உறவினர்களுக்கு அறிக்கைகளை வழங்கல் உள்ளிட்ட அதிக பணிகளைக் காணாமல்போன ஆள்கள் பற்றிய அலுவலகத்துக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, குறித்த முறைப்பாடுகளை விசாரணை செய்து முடிவுறுத்துவதற்காக 25 விசாரணைக் குழுக்களை நியமித்து துரித வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக நீதி அமைச்சரே மேற்படி அமைச்சரவை பத்திரத்தை முன்வைத்தார் - என்றார்.

---

## பயணத்தின் போது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பஸ்ஸின் முன்பக்கச் சில்லு பஸ் பயணித்துக் கொண்டிருந்தபோது கழன்று ஓடிய சம்பவம் நேற்று இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது:-

யாழ்ப்பாணத்தில் இருந்து முல்லைத்தீவு நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸின் முன் பக்கச் சில்லு பரந்தன் பகுதியில் அச்சில் இருந்து திடீரென விலகியது.

இந்நிலையில், சாரதியின் சாமர்த்தியத்தால் எவ்வித அசம்பாவிதங்களும் ஏற்படாதவாறு பஸ் நிறுத்தப்பட்டது.

## அமைச்சுப் பதவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
விமல் வீரவன்ஸ, அண்மையில் அமைச்சரவையில் இருந்து நீக்கப்பட்டார். இந்நிலையிலேயே அவரின் கட்சியைச் சேர்ந்த இராஜாங்க அமைச்சுப் பதவியை வகித்த ஜயந்த சமரவீரவும் பதவி விலகியுள்ளார்.

தேசியப் பட்டியல் ஆசனம் ஒன்று உட்பட தேசிய சுதந்திர முன்னணியின் ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபையில் அங்கம் வகிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

---

## முல்லைத்தீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
முன்றலில் ஆரம்பமான போராட்டம், முல்லைத்தீவு பிரதான சுற்றுவட்டப் பாதை வரை ஊர்வலமாக வருகை தந்து நிறைவடைந்தது.

ஐக்கிய நாடுகள் சபையின் 49ஆவது மனித உரிமைகள் கூட்டத் தொடர் தற்போது ஜெனிவாவில் இடம்பெற்று வரும் நிலையில், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கான நீதியைச் சர்வதேச சமூகம் விரைந்து வழங்க வேண்டும் என வலியுறுத்தியும், இலங்கை அரசை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்த வேண்டும் எனக் கோரியும், சர்வதேச மகளிர் தினத்தைத் துக்கதினமாகக் கடைப்பிடிக்க வேண்டும் எனவலியுறுத்தியும் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கான நீதியைக் கோருகின்ற வகையில் தமிழ், சிங்கள, ஆங்கில மொழிகளிலான பாதாதைகளைத் தாங்கியவாறும், கோஷங்களை எழுப்பியவாறும், கறுப்புக்கொடியை ஏந்தியவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன், காணாமல் ஆக்கப்பட்டோரது உறவினர்கள், சமூகமட்டப் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

---

## கோட்டா தலைமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
வாராந்தம் கூட்டுவதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

பெருநிலைப் பொருளாதாரக் கொள்கை, கொரோனாப் பெருந்தொற்று நிலைமையின் பின்னர் தேசிய பொருளாதாரத்தின் செயற்பாடு, பொருளாதார மீள்கட்டமைத்தல், அரசின் பொருளாதாரக் கொள்கை மற்றும் நிதிக் கொள்கைகளில் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்தும் முக்கிய அபிவிருத்திக் கருத்திட்டங்கள் உள்ளிட்ட பொருளாதாரக் கொள்கைகள் தொடர்பாக மிகவும் ஆழமாகக் கலந்துரையாடி, நாட்டின் பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்தும் நோக்கில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த பேரவையின் ஆலோசனைகள், வழிகாட்டல்களுக்கமைய ஏற்புடைய அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்கள் தேவையான சந்தர்ப்பங்களில், அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் இயைபுடைய தீர்மானங்களை நடைமுறைப்படுத்தவும், தேவைக்கேற்ப பொருளாதாரப் பேரவைக் கூட்டத்துக்குப் போதுமான துறைசார் அறிவுகொண்ட கல்வியியலாளர்களை அழைக்கவும், ஜனாதிபதியால் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் படிமுறைகள் தொடர்பாக அமைச்சரவையின் உடன்பாட்டை வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, பொருளாதாரப் பேரவையின் கட்டமைப்பு ஜனாதிபதி, பிரதமர், வர்த்தக அமைச்சர், நெடுஞ்சாலைகள் அமைச்சர், நிதி அமைச்சர், விவசாய அமைச்சர், பெருந்தோட்டத்துறை அமைச்சர், மத்திய வங்கி ஆளுநர், ஜனாதிபதியின் செயலாளர், திறைசேரி செயலாளர் மற்றும் மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் ஆகியோரின் அடிப்படையில் அமையவுள்ளது.

# 17 வயதுப் பெண் கர்ப்பம்; சிறிய தந்தையார் கைது!

வவுனியா பூவரசன்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 17 வயது பெண் ஒருவர் கர்ப்பம் தரித்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சந்தேகத்தின் பேரின் பெண்ணின் சிறிய தந்தையார் நேற்று பூவரசன்குளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா, பூவரசன்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வாழும் குடும்பம் ஒன்றைக் கணவன் கைவிட்டு சென்ற நிலையில், மனைவி இரண்டு பிள்ளைகளுடன் வேறு ஒருவரை திருமணம் செய்திருந்தார்.

குறித்த பெண் வேலை வாய்ப்புக்காக மத்திய கிழக்கு நாட்டுக்கு சென்றுள்ள நிலையில் இரு பிள்ளைகளும் சிறிய தந்தையாருடன் வீட்டில் வசித்து வந்தனர். இந்நிலையில் 17 வயது பெண் உடல் நிலை சுகவீனமுற்ற நிலையில் பூவசரன்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது குறித்த பெண் கர்ப்பம் தரித்திருந்தமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து பூவரசன்குளம் பொலிஸார் பெண்ணிடம் மேற்கொண்ட விசாரணைகளையடுத்து தாயின் இரண்டாவது கணவனரான சிறிய தந்தை பொலிஸாரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவரிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார் நீதிமன்றில் அவரை முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை திருத்த 2/3 ஆதரவு கட்டாயமாம்!



பயங்கரவாதத் தடுப்புச் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டமூலம் தொடர்பில் உயர் நீதிமன்றம் தன்னுடைய வியாக்கியானத்தை நாடாளுமன்றத்துக்கு அனுப்பி வைத்துள்ளது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் (தற்காலிக ஏற்பாடுகள்) சில ஷரத்துகளும், பல ஷரத்துகள் திருத்தங்களுடன் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டும் என்று அந்த வியாக்கியானத்தில் தெரிவித்துள்ளது.

நேற்றைய நாடாளுமன்ற அமர்வை ஆரம்பித்ததன் பின்னர், சபாநாயகர் அறிவிப்பின்போதே, உயர்நீதிமன்றத்தின் அறிவிப்பை விடுத்தார்.

---

## யாழில் மின்சாரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பணியாற்றிக் கொண்டிருந்தபோது அதில் ஏற்பட்ட மின் ஒழுக்கு இளைஞரைத் தாக்கியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை முன்னெடுத்தார்.


# மரண அறிவித்தல்

## ஆசைப்பிள்ளை இராசரத்தினம்



காரைநகர், வலந்தலை, மாப்பாணவூரி சடையாளியைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆசைப்பிள்ளை இராசரத்தினம் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை தமது 94ஆவது வயதில் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், உருத்திரா (UK), நிர்மலா (Canada), சகுந்தலா (France), குலேந்திரன் (பிராந்திய முகாமையாளர் - கொமர்ஷல் வங்கி / நேஷன் ட்ரஸ்ட் வங்கி / பான் ஏசியா வங்கி), பிரம்மா (UK) ஆகியோரின் அன்புத் தந்தையும், பிருந்தா (UK), சத்தியதேவன் (Canada), சக்திகுமார் (France), வசந்தி, அகிலா (UK) ஆகியோரின் அன்பு மாமனாரும், நவீன், கீர்த்தனா, செந்தூரன், நிரூஜா, சஞ்சய், சப்னா, காயத்திரி, திருச்செந்தூரன், ஹரிணி, மதுமி ஆகியோரின் பேரனும், ஆர்யா, கைலாஷ், பிரணவ், பிரணிகா, ஆருத்திரன், நயன், மியா, ஜெய்டன் ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை, கனத்தை, ஜெயரட்ண மலர்ச்சாலையில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை (11ஆம் திகதி) பகல் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு, பிற்பகல் 2 மணி முதல் இறுதிக் கிரியைகள் நடைபெற்று, மாலை 4 மணிக்கு கனத்தையில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:—
இ.குலேந்திரன் (மகன்) 0773111361

காலைக்கதிர் Kalaikkathir





# காணாமலாக்கப்பட்டோர் உறவுகள் கிளிநொச்சியில் கவனவீர்ப்பு போர்!

சர்வதேச மகளிர் தினத்தை புறக்கணித்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் போராட்டம் ஒன்றை நேற்று (செவ்வாய்க்கிழமை) முன்னெடுத்தனர்.

இந்தப் போராட்டம் கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கத்துக்கு முன்பாக இடம்பெற்றது. இதன்போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் காணமல் போன தமது உறவுகளின் படங்கள் மற்றும் பதாதைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி எதிர்ப்பை வெளிப்படுத்தினர். தமது எதிர்ப்பை வெளிப் படுத் தும் வகையிலான கருத்துக்களை ஊடகங்களுக்கு இதன்போது வெளிப்படுத்தியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## வழிப்பிள்ளையார் ஆலயத்தை மீட்க கோரி தலவாக்கலையில் கவனவீர்ப்பு போராட்டம்



தலவாக்கலையில் கடந்த சில வாரங்களாக பேசும் பொருளாக மாறியுள்ள தலவாக்கலை லோகி தோட்ட மல்லிகைபூ சந்தியில் அமைந்துள்ள மிகவும் பிரசித்திப்பெற்ற வழிப்பிள்ளையார் ஆலயத்தை தலவாக்கலை கதிரேசன் தேவஸ்த்தான பரிபாலன சபையிடம் ஒப்படைக்க வேண்டும் என கோரி நேற்று (செவ்வாய்க்கிழமை) தலவாக்கலை நகரில் உள்ள அனைத்து கடைகளும் அடைக்கப்பட்டு கவனவீர்ப்பு ஆர்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

சுமார் 200 வருடங்கள் பழைமை வாய்ந்த குறித்த ஆலயத்தில் இருந்த 150 வருடத்திற்கு மேல் பழைமை வாய்ந்த ஆலமரம் வெட்டப்பட்டதன் காரணமாக மரத்தின் கிளைகள் வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஆசிரியர் மீது விழுந்து அவர் மரணம் அடைந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் அதிகாரிகளை அழைத்து விசாரணைகளை நடத்தி தீர்வுகள் பெற்றுக்கொடுக்க வேண்டும் எனத் தெரிவித்திருந்த போதிலும் அது தொடர்பாக எந்த நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்படாத நிலையில் தனி நபர் ஒருவர் மீண்டும் மேற்படி ஆலயத்தை அபகரித்து விடுதி ஒன்றை அடைக்க முற்படுகிறார் எனவும் இதனால் இந்தப் பிரதேசத்தில் உள்ள மிகவும் பழைமைமைவாய்ந்த ஆலயம் அழியக்கூடிய அபாயம் காணப்படுவதனாலும், குறித்த ஆலமரத்தின் கிளைகள் தொடர்ந்து முறிந்து வீழ்வதால் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும், மரணித்த ஆசிரியர் குடும்பத்திற்கு இதுவரை எவ்வித நிவாரண உதவிகள் வழங்கப்படவில்லை என சுட்டிக்காட்டியுமே கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

தலவாக்கலை ஸ்ரீ கதிரேசன் ஆலயத்தின் ஆலய பரிபாலன சபையினரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தின் போது பதாதைகளை ஏந்தி, கைகளில் கறுப்பு பட்டிகளை அணிந்து தமது எதிர்ப்பை போராட்டக்காரர்கள் வெளிப்படுத்தினர்.

இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதி, பிரதமர் மற்றும் மலையக அரசியல் தலைவர்களுக்கு மகஜர் ஒன்றும் கையளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

மேற்படி ஆர்ப்பாட்டத்தில் மதகுருமார்கள், வர்த்தகர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## கருக்கலைப்புத் தொடர்பான சட்டம் குறித்து ஆராய தயார்!

### என்கின்றார் நீதி அமைச்சர்



கருக்கலைப்பு தொடர்பாக அனைத்து தரப்பினருடன் கலந்துரையாடி பிரேரணை சமர்ப்பித்தால், அது தொடர்பாக ஆராய்ந்து சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளத் தயார் என நீதி அமைச்சர் அலிசப்றி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது ஆளும் தரப்பு உறுப்பினர் சாந்த பண்டார இடையீட்டு கேள்வி ஒன்றை முன்வைத்தார்.

பலாத்காரமாகத் துஷ்பிரயோகத்துக்கு ஆளாகும் பெண்ணின் கருவறையில் உருவாகும் கருவை இல்லாமலாக்குவது தொடர்பாக சட்டரீதியில் பிரச்சினை இருந்து வருகின்றது எனக் கூறினார்.

இது மிகவும் கவலைக்குரிய பிரச்சினை என்றும் இந்நிலைக்கு ஆளாகும் பெண், பல்வேறு அசௌகரியங்கள் மற்றும் சமூகத்தில் தாழ்த்தப்படும் நிலை உருவாக்குவதாகவும் சாந்த பண்டார குறிப்பிட்டார்.

மேலும் பிறக்கும் குழந்தையும் காலம்பூராக சமூகத்தில் இழிவுபடுத்தல்களுக்கு ஆளாக நேரிடுகிறது என சாந்த பண்டார தெரிவித்த நிலையில் இதற்குப் பதில் வழங்கும் போதே நீதி அமைச்சர் அலிசப்றி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## வடக்கு, கிழக்கு அபகரிப்பு தொடர்பாக ஐ.நாவில் பிரிட்டன் கவலை தெரிவிப்பு

இலங்கையின் வடக்கு, கிழக்கில் இடம்பெறும் நில அபகரிப்பு குறித்து பிரிட்டன் கவலை வெளியிட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் உரையாற்றுகையில் பிரிட்டனின் மனித உரிமைகளுக்கான சர்வதேச தூதுவர் ரிட்டா பிரென்ஞ் இதனைத் தெரிவித்துள்ளார்.

பொறுப்புக்கூறல் விடயத்தில் தொடர்ந்தும் முன்னேற்றம் ஏற்படாதமை தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் கரிசனையை நாங்கள் பகிர்ந்து கொள்கின்றோம், உலகின் கவனத்தை ஈர்த்த பல மனித உரிமை விவகாரங்கள் தொடர்பில் பின்னடைவுகள் காணப்படுகின்றன என்பது தொடர்பாக நாங்கள் ஏமாற்றமடைகின்றோம்.

கவிஞர் அஹ்னாவ் ஜசீம் மற்றும் சட்டத்தரணி ஹெஜாஸ் ஹிஸ்புல்லா விடுதலை செய்யப்பட்டதை சாதகமான முதற்கட்ட நடவடிக்கை என நாங்கள் வரவேற்கின்றோம்.

அதேவேளை பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் மேற்கொள்ளப்படும் ஆரம்ப சீர்திருத்தங்களை நாங்கள் அங்கீகரிக்கும் அதேவேளை இவை போதுமான அளவிற்கு செல்லவில்லை என்பதைத் தெரிவிக்கின்றோம்.

சிவில் சமூகத்தினர் துன்புறுத்தப்படுவது, அச்சுறுத்தப்படுவது சிவில் நிர்வாக செயற்பாடுகள் இராணுவ மயப்படுத்தப்படுவது, நன்கறியப்பட்ட மனித உரிமை சம்பவங்களில் குறிப்பிடப்பட்ட நபர் மாநில ஆளுநராக நியமிக்கப்பட்டமை, போன்றவை தொடர்பில் நாங்கள் கரிசனைகளை கொண்டுள்ளோம்.

குறிப்பாக இந்த நியமனம் கடும் கவலையளிக்கின்றது. இழப்பீடு மற்றும் காணாமல் போனவர்கள் குறித்து அரச ஸ்தாபனங்களில் இடம்பெறும் செயற்பாடுகளை நாங்கள் ஏற்றுக்கொள்ளும் அதே வேளை இவை முழுமையான நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறும் செயற்பாடுகளுடன் இணைந்ததாக காணப்படுவது அவசியம். இலங்கையில் சிறுபான்மை சமூகத்தினர் அதிகளவு புறக்கணிப்பை எதிர்கொள்வது மற்றும் நாட்டின் வடகிழக்கு பகுதிகளில் இடம்பெறும் நிலஅபகரிப்பு குறித்து நாங்கள் கரிசனையுடன் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

46/1 தீர்மானம் குறித்து இலங்கை ஆக்கபூர்வமான விதத்தில் ஈடுபாட்டை காண்பிக்க வேண்டும், ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் அலுவலகத்திற்கு ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என நாங்கள் வேண்டுகோள் விடுக்கின்றோம்.' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## எரிவாயுக் கப்பலுக்கான கட்டணம் செலுத்தல்

இலங்கை கடற்பரப்பிற்கு வந்த 03 எரிவாயுக் கப்பல்களில் ஒன்றுக்கான பணம் செலுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து முத்துராஜவெல எரிவாயு முனையத்துக்கு எரிவாயு அனுப்பும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு எரிவாயு ஏற்றி வந்த மூன்று கப்பல்கள் வத்தளை, உஸ்வெட்டகேயாவ மற்றும் தல்தியவத்தை கடற்பரப்பில் சுமார் ஏழு நாள்களாக நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டிருந்தன.

இதன்படி, தல்தியவத்தை எரிவாயு நிலையத்திலிருந்து முத்துராஜவெல எரிவாயு முனையத்துக்கு 2 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் எரிவாயுவை வெளியேற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எரிவாயுவை ஏற்றிவந்த மற்றுமொரு கப்பலுக்கான கொடுப்பனவுகள் நேற்று (செவ்வாய்க்கிழமை) செலுத்தப்பட்டன.